விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 31 செவ்வாய்க்கிழமை (13.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 146




# கிழக்கு மாகாண தேர்தலுக்கு எதிராக வீதியில் இறங்க எதிர்க்கட்சி தீர்மானம்

(கொழும்பு)

வன்முறைகள் நிறைந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்க இருப்பதுடன் சர்வதேச ரீதியிலும் நடவடிக்கை எடுக்க இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தெரிவித்துள்ளன. இத் தேர்தலானது தனது வாழ்க்கையில் மிக மோசமான தேர்தல் என ஹக்கீம் தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## 68 தமிழ் அரசியல் கைதிகள் பூசாவுக்குத் திடீர் மாற்றம்

(கொழும்பு)

கொழும்பு புதிய மகசீன் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 68 பேர் அங்கிருந்து இரவோடு இரவாக பூசா தடுப்பு முகாமுக்கு திடீரென மாற்றப்பட்டுள்ளனர்.

சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் திடீரென தமிழ் அரசியல் கைதிகளை பஸ்களில் ஏற்றிய சிறைக்காவலர்கள் அவர்களை பொலிஸாரின் காவலுடன் பூசா தடுப்பு முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகளே இவ்வாறு இடமாற்றப்பட்டுள்ளனர். இரவு 10.30 மணியளவில் பூசா தடுப்பு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்ட இவர்களில் பலர் நிர்வாணம் ஆக்கப்பட்டு தாக்குதலுக்கு உள்ளானதாக (10ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் வன்முறை

(யாழ்ப்பாணம்)

அம்பாறை கல்முனைக்குடியில் நேற்று இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் ஒன்றில் ஆளும் கட்சி ஆதரவாளர்களின் சில வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற ஆளும் கட்சி உறுப்பினர்களின் வாகனப் பேரணி ஒன்று அக்கரைப்பற்றிலிருந்து மருதமுனை நோக்கிச் சென்று திரும்பும் போது மற்றொரு கட்சி ஆதரவாளர்களினால் வழிமறிக்கப்பட்டு இவ் வன்முறை இடம்பெற்றுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பில் நேற்றிரவு 7 மணியளவில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மற்றொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலநறுவை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இருவரும் தேர்தல் கண்காணிப்புக்காக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் இணைக் (10ஆம் பக்கம் பார்க்க)

## சுமுகமாக நடந்து முடிந்த கிழக்கு மாகாண தேர்தல்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைக்காக கடந்த சனிக்கிழமை நடந்து முடிந்த தேர்தல் எவ்வித வன்முறைகளும் இன்றி மிகவும் சுமுகமான சூழ்நிலையிலேயே நடைபெற்றதாக ஆசிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்று காலை ஊடகவியலாளர் மாநாட்டினை நடாத்திய போது இதனைத் தெரிவித்தனர்.

தமது அமைப்பில் பூட்டான், நேபாளம், பிலிப்பைன்ஸ், தாய்வான், பங்களாதேஷ், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் மொங்கோலியா போன்ற நாடுகளிலிருந்து வந்த 11 உறுப்பினர்கள் தேர்தலை களத்தில் சென்று அவதானித் (10ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் கிடைத்த மிகப் பெரிய வெற்றி

### அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி ஏற்று இரண்டரை வருடங்கள் ஆகியுள்ள நிலையில் அரசியல் வெற்றிகளில் கிழக்கு மாகாண சபை வெற்றியானது பாரிய வெற்றி என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தேசியப் பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டதன் விளைவை இந்தக் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டியிருப்பதாகக் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பான தெளிவானதொரு செய்தி வட பகுதி மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளியிடப்பட்டுள்ளது. (05ஆம் பக்கம் பார்க்க)

## வீரவன்சவை தலைவராகக் கொண்டு 'தேசிய சுதந்திர முன்னணி' உதயம்

(கொழும்பு)

ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்ற அணியினர் விமல் வீரவன்ச தலைமையில் தேசிய சுதந்திர முன்னணி என்ற புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்துள்ளனர். இக் கட்சியை அரசியில் கட்சியாக பதிவு செய்வதற்கான விண்ணப்பம் நேற்று திங்கட்கிழமை தேர்தல்கள் ஆணையாளரிடம் முன்னணியின் பொதுச் செயலாளர் நந்தன குணதிலக எம்.பி.யினால் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒன்றரை மாத காலமாக விமல் தலைமையிலான ஜே.வி.பியின் ஒன்பது எம்.பி.க்கள் இணைந்து செயற்பட்டு வந்தனர். இந்நிலையில் தனது பிரச்சினைக்கு தீர்வு காண கட்சிக்கு மே மாதம் முதலாம் திகதி வரை விமல் வீரவன்ச காலக்கெடு கொடுத்திருந்தார். இல்லாவிட்டால் புதுக்கட்சி ஆரம்பிக்கப் போவதாகவும் அறிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே ஏற்கனவே ஜே.வி.பிலிருந்து வெளியேற்றப்பட்ட நந்தன குணதிலக எம்.பியுடன் இணைந்து புதிய அரசியல் கட்சி ஆரம்பிக் (10ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கின் முதலமைச்சர் யார்? அரசு-பிள்ளையான் முறுகல்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திற்கான முதலமைச்சர் யார்? என்பதை தெரிவு செய்வதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் முஸ்லிம் அமைப்புக்களுக்குமிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு, லண்டனி[illegible]ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று இலங்கைக்கு திரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது. இப்பிரச்சினை குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்துள்ளதாவது,

தேர்தலின் பின்னர் கூட்டணிக் கட்சிகளிடையே கலந்துரையாடல்களை நடாத்தி அதனடிப்படையில் யார் முதலமைச்சர்? எனத் தீர்மானிப்பதென ஏற்கனவே முடிபு செய்யப்பட்டுள்ளது. அதன்படி கூட்டணிக் கட்சிகளின் கூட்டம் நடைபெற்று அதில் முடிபு எடுக்கப்படும்.

ஒவ்வொரு கட்சியும் எவ்வளவு ஆசனங்களைப் பெற்றுள்ளன என்பதன் அடிப்படையில் முடிபு செய்யப்படும் என்றார். பிள்ளையானும் ஹிஸ்புல்லாவும் தமக்கே முதலமைச்சர் பதவி தரப்பட வேண்டும் என கோரி வருகின்றனரே என அவரிடம் கேட்கப்பட்ட போது, எவ்வாறாயினும் கட்சிகளின் தலைவர்களின் மாநாட்டின் போது நல்லதொரு முடிபுக்கு வர முடியும் என்றார்.


இதேவேளை எந்தச் சமூகம் அதிகமான ஆசனங்களைப் பெற்றுள்ளதோ அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவரே முதலமைச்சர் ஆக்கப்படுவார் என இணக்கம் காணப்பட்டிருந்ததாக ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் முஸ்லிம் சமூகத்தை சார்ந்தவர்கள் (10ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை கப்பல் தகர்ப்பு- குழப்பத்தில் படைத்தரப்பு கொழும்பு ஆங்கில வார ஏடு -லக்பிம தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை துறைமுகத்தில் கடந்த சனிக்கிழமை அதிகாலை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விநியோகக் கப்பல் தகர்க்கப்பட்டது எத னால் என்று படைத்தரப்பு குழப்பத்தில் இருப் பதாக கொழும்பில் இருந்து வெளி வரும் 'லக்பிம' ஆங்கில வார ஏடு தெரிவித் துள்ளது.



இது தொடர்பில் அதன் பாதுகாப்பு ஆய் வுப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு,

கடந்த சனிக்கிழமை அதிகாலை 2 மணிய ளவில் மிகவும் சக்திவாய்ந்த குண்டு ஒன்று திருகோணமலையின் வர்த்தக துறைமுகத் தில் வெடித்திருந்தது. அதில் எழுந்த பெரும் நெருப்பு ஏ-520 என்ற பாரிய விநியோகக் கப்பலை சூழ்ந்துகொண்டது.

காவல் கடமையில் இருந்த படையினர் தமது துப்பாக்கிகளை வானத்தை நோக்கித் திரும்பினர். இது ஒரு வான் தாக்குதல் என அவர்கள் முதலில் எண்ணினார். இரு வாரங் களுக்கு முன்னர் வான் புலிகள் மணலாறை தாக்கியிருந்தனர். ஆனால் நீருக்கு அடியில் நடைபெற்ற தாக்குதலே கப்பலை தகர்த்திருந் தது.

'எம் வி இன்வின்சிபிள்' எனப்படும் ஏ-520 விநியோகக் கப்பல் அஸ்ரப் துறைமுகத் தில் நங்கூரம் பாய்ச்சி நின்றிருந்தது. இத்தாக் குதலில் முற்றாக எரிந்த கப்பல் 2 மணிநேரத் தில் நீரில் முற்றாக முழ்கிவிட்டது. தாக்குதல் எவ்வாறு நிகழ்ந்தது என்பது தொடர்பாக பெரும் ஆச்சரியம் ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் நீரடி நீச்சல் பிரிவினர் கப் பலின் அடிப்பகுதியில் காந்தப்புல வெடிகுண்டை பொருத்தியிருக்கலாம் என நம்பப்படுகின் றது.

2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் விடுத லைப் புலிகளின் இரு நீரடி நீச்சல் பிரிவினர் கொழும்பு துறைமுகத்தில் நின்ற கப்பல்களை தகர்க்க முற்பட் டிருந்தனர். கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதியும் புதிய வகை தாக்கு தல் மூலம் பி-438 இலக்க போராப் படகு நாயாறு கடலில் வெடித்துச் சிதறியிருந்தது. பின்னர் அப்பகுதி யில் இருந்து காந்தப்புல வெடிகுண் டின் பகுதிகள் மீட்கப்பட்டிருந்தன.

### ஸ்கூட்டர்கள் மூலம் தாக்குதல்?

விடுதலைப் புலிகள் நீருக்கு அடியில் பயணம் செய்யும் சிறிய ஸ்கூட்டர் களையும் பயன் படுத்தியிருக்கலாம் என்ற சந்தேகங்களும் எழுந்திருந்தன. 2003ஆம் ஆண்டு காலப் பகுதியில் நீருக்கு அடியில் பயணம் செய்யும் ஸ்கூட்டர்களையும் கொள் வனவு செய்வதற்கு விடுதலைப்புலிகள் முயற் சித்திருந்தனர். அவற்றை இலகுவில் இணையத் தளங்களின் ஊடாக பெற்றுக்கொள் ளலாம்.

2003ஆம் ஆண்டு ஏப்ரலில் 34 ஸ்கூட்டர் களை கொள்வனவு செய்யும் பேச்சுக்களை யும் அவர்கள் டென்மார்கில் உள்ள நிறுவனம் ஒன்றுடன் மேற்கொண்டிருந்தனர். பெரும் பாலான ஸ்கூட்டர்கள் பாரம் குறைந்தவை (15-20 கி.கி.) இவை கடலுக்கு அடியில் 1-3 கடல் மைல் வேகத்தில் பயணம் செய்வது டன், நீருக்கு அடியில் ஒரு மணி நேரத்திற் கும் மேலாக பயணிக்கக்கூடியவை.

இந்த ஸ்கூட்டரில் நீருக்கு அடியில் பய ணிக்கும் ஒருவர் போதுமான வெடி மருந்தை காவிச் சென்று கப்பல் தகர்க்க முடியும். அத னைக் கண்டறிவது சிரமமானது. இதன் மூலம் நகருக்கு கப்பல்களை விட நங் கூரம் பாய்ச்சி நிற்கும் கப்பல்களைத் தகர்ப்பதே அதிகம் சாத் தியமானது.

1970-களில் கட்டப்பட்ட ஏ-520 ரக விநி யோகக் கப்பல் சட்டவிரோத குடியேற்றவாசி களை ஏற்றி வந்திருந்தது. பின்னர் நீதிமன் றத்தின் உத்தரவுக்கு அமைய அது 2003ஆம் ஆண்டு கடற்படையில் இணைத் துக் கொள் ளப்பட்டது. அதனை விநியோகக் கப்பலாக கடற்படையினர் பின்னர் மாற்றி அமைத் திருந்தனர்.

சீனன்குடா துறைமுகப் பகுதியில் நீரடி நீச் சல் பிரிவினர் உட்புக முடியாதவாறு வலைக ளாலான பாதுகாப்பைக் கொண்டது இத்தாக் குதலும், நாயாறு கடற்பரப்பில் நடைபெற்ற தாக்குதலும் விடுதலைப்புலிகள் புதிய தாக்கு தல் உத்திகளை கடைப்பிடிப்பதனை காட்டி யுள்ளது. லெப்.கேணல் கங்கை அமரன் நீரடி நீச்சல் பிரிவினர் இத்தாக்குதலை நடத்திய தாக தமிழ்நெற் இணையத்தளம் தெரிவித் திருந்தது.

கடற்படையினரின் தொடர்ச்சியான தாக்கு தல்களால் விடுதலைப் புலிகளின் முராஜ் ரக அதிவேக தாக்குதல் படகுகள் மற்றும் கரும் புலிப் படகுகளின் எண்ணிக்கைகள் குறைந் துள்ளதாக கடற்படைத் தளபதி வைஸ் அட் மிரல் வசந்த கரன்னகொட அண்மையில் நடைபெற்ற பாதுகாப்புச் சபைக்கூட்டத்தில் தெரிவித்திருந்தார். முராஜ் படகுகள் கடற்படை யினரின் டோராப் படகுகளுக்கு இணையா னவை. ஆனால் கடற்புலிகளின் பலம் தொடர் பாக ஏனைய கடற்படைத் தளபதிகள் வேறு பட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர். (அ-5)

# வன்னி படையெடுப்பை நிறுத்த 27 அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சி

## திவயின பாதுகாப்பு விமர்சனத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னி மீதான படையினரின் படை யெடுப்பு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத் தும் நோக்கில் 27 சர்வதேச அரச சார்பற்ற நிறு வனங்கள் செயற்பட்டு வருவதாக தகவல் கிடைத்துள்ளது.

இலங்கையின் மனித உரிமை மீறப்படு வதற்கு அந்நாட்டு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என்று கூறி மேற்படி இயக்கங் களால் ஐக்கிய நாடுகள் சபைக்கு கடித மொன்றை அனுப்பி வைத்துள்ளன.

கடந்த 6ஆம் திகதி அனுப்பிவைக்கப் பட்டுள்ள மேற்படி கடிதத்தில் சர்வதேச மனித உரிமைச் சங்கத்தில் இலங்கையை இணைத் துக்கொள்ள வேண்டாம் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இவ்வாறு இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக குரல் கொடுக்கும் விடுதலைப் புலிக ளுக்கு சார்பான இயக்கங்களில் சில இது வரையில் இனங்காணப்படாதவை என தெரிய வந்துள்ளது.

இவற்றில் 'ஆர்டிக்கல் 19' மற்றும் 'ரிப் போட்டர்ஸ் வித்தவுட்போர்டர்ஸ்' எனும் சர்வதேச ஊடக வியலாளர்களின் இரு இயக்கங்களும் உள்ள டங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு இலங்கைக்கு எதிராக குரல் கொடுக்கும் இயக்கங்களின் முக்கியஸ்தர் கள் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஒருபோதும் இடமளிக் கக் கூடாது.

இம் முக்கியஸ்தர்களின் பிரதான நோக் கம் தமிழ் மக்களின் நலன் கருதி இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதன் மூலம் படையினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் வன்னி படையெடுப்புகளை தடுத்து நிறுத் துவது ஆகும். (அ-5)

# தேர்தல் வெற்றிகரமாக நடந்தமை மனநிறைவைத் தருகின்றது!

## ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா கருத்து

(கொழும்பு)

இருபது வருடங்களுக்குப் பின்னர் கிழக்கு மாகாண சபைக்கு உறுப்பினர்க



ளைத் தேர்ந் தெடுத்துக் கொள்வதற் கான தேர்த லொன்றை ஜன நாயக ரீதியில் நடத்தி முடித் துள் ளோம். மூன்று மாவட்டங்களிலும் பாரிய சம்பவங் கள் எதுவும் நடைபெறவில்லை. சிறு சிறு சம்பவங் களே இடம்பெற்றுள்ளன. தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடிக்கக் கிடைத்தமையையிட்டு மனநிறைவு கொள்கின் றேன் என தேர்தல்கள் ஆணையாளர் தயா னந்த திஸா நாயக்கா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் முடிபுகள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப் பட்டதன் பின்னர் தேர்தல் ஆணையாளரால் விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரி விக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

இத்தேர்தல்கள் மூலம் கிழக்கில் ஜனநாய கத்தை உறுதி செய்ய முடிந்துள்ளது. தேர் தலை ஒழுங்காக நடத்தி முடிப்பதற்கு மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரிகளும் அலுவலக ஊழியர்களும் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்களும் அவர்களது ஊழியர்க ளும் அரச அதிகாரிகளும் வழங்கிய ஒத்து ழைப் பைப் பாராட்டுவதோடு அவர்களுக்கு நன்றி யைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் வாக்களிப்பு முடியும் வரையில் கிழக்கு மாகாணத்தில் அமைதியையும் பாது காப்பையும் உத்தரவாதப்படுத்தும் பொருட் டும் வேட்பாளர்களின் பாதுகப்பையும் வாக்க ளிப்பு நிலையங்கள், அரச சொத்துக்கள் போன்றவற்றின் பாதுகாப்பையும் உறுதிப் படுத்தும் பொருட்டு முப்படையினரும், பொலி ஸாரும் மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக் கைகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின் றேன்.

அத்துடன் தேர்தல் தொடர்பில் முழு அள வில் பங்களிப்புச் செய்த அரச அச்சகக் கூட் டுத்தாபனம், தபால் திணைக்களம், ரெலி கொம் நிறுவனம், இலங்கை மின்சார சபை, இலங்கை போக்குவரத்துச்சபை ஆகியவற் றுக்கு நன்றியைத் தெரிவிக்க விரும்புகின் றேன்.

தேர்தலைக் கண்காணிப்பதில் ஈடுபட்ட உள்ளூர் கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் ஆசிய தேர்தல் அதிகாரசபை அனுப்பி வைத்த வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் ஆகியோரின் சேவையைப் பாராட்டுகின் றேன்.

இத்தேர்தலை நடத்தி முடித்ததன் மூலம் நீண்ட காலமாக பாதுகாப்பற்ற பிரதேசங் களில் நெருக்கடிகளுடன் வாழ்ந்த மக்களுக்கு சிவில் நிர்வாகத்துக்குள் செயற்பட வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது .

ஜனநாயக ரீதியில் தமது உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்க முடிந்துள்ளது. தெற் கிலுள்ள ஏனைய மாகாணங்களில் வாழும் மக்களைப் போன்று கிழக்கு மக்களுக்கும் இன்று முதல் சுயமாக இயங்கும் இயல்பு நிலையை உருவாக்க முடிந்தமையையிட்டு நாம் பெருமிதமும் மன ஆறுதலும் அடை கின்றோம் எனத் தெரிவித்துள்ளார். (அ-5)


## மணநீக்கத் தீர்வையெழுதி மணவிலக்கு அளிக்கும் பின்னுறுதித் தீர்வை யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

பூபாலசிங்கம் சோதீஸ்வரன்,
பெண் கேதீஸ்வரி,
421 ,பருத்தித்துறை றோட், நல்லூர்,
யாழ்ப்பாணம்.

வழ இல: மணவிலக்கு 830

**வழக்காளி**

**எதிராக**

பூபாலசிங்கம் சோதீஸ்வரன்,
ஊரெழு கிழக்கு,சுன்னாகம்.

**எதிராளி**

மேற்குறித்த இலக்க வழக்கு யாழ்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்பாக 2008ஆம் ஆண்டு சித்திரை மாதம் 23ஆம் திகதியன்று வழக்காளியும் வழக்காளியின் சட்டத்தரணிகள் திருவாளர்கள் கனகரத்தினம் அசோசியேட்ஸ் (நிறுவனத் தினர்) பிரசன்னமாயிருக்க முடிவெய்ய வந்த போது மேற்குறித்த எதிராளிக்கு இவ்வழக்கில் அழைப்புக்கட்டளை வலம்புரி பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்டு பதில் சேவகமாக அவருக்கு வழங்கப்பட்டு மறுமொழி அணைக்கத்தவறியமையால்.

இவ்வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு மேற்குறித்த எதிராளி வழக்காளியை வேண்டுமென்று துறந்தார். என்ற குற்றத்தைப் புரிந்துள்ளார் என மன்று கருதியதால் பின் வருமாறு மன்று கட்டளையிட்டுத் தீர்வையளித்துள்ளது.

இப் பின்னுறுதித் தீர்வையின் பிரதி வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியி லிருந்து அதனடுத்து (3) மூன்று மாத காலத்துக்குள் மேற்குறித்த எதிராளி இப் பின்னுறுதித் தீர்வையை இம் மன்றின் முழுவிதிப்பாக ஏன் எழுதக்கூடாதென்பதற்குத் தகுந்த காரணங் கள் காட்டினாலன்றி மேற்குறித்த எதிராளி வழக்காளியை வேண்டும் என்று துறந்தார் என்ற காரணத்திற்காக மேற்குறித்த வழக்காளிக்கும் எதிராளிக்கும் 1990 ஐப்பசி மாதம் 31ஆம் திகதி நடைபெற்ற விவாகப் பதிவை இரத்துச் செய்து ஒரு மண நீக்கத்தீர்வையை இம் மன்று விதிக் கின்றது என்றும் வழக்காளிக்கும் எதிராளிக்கும் பிறந்த பிள்ளைகளான சௌதாமினி, ஸோபனா ஆகியவர்கள் வழக்காளியின் பாதுகாவலிலேயே தொடர்ந்தும் வளர்ந்து வரவேண்டும் என் றும் இம் மன்று கட்டளையிட்டுத் தீர்வையளித்துள்ளது.

இப்பின்னுறுதித் தீர்வை இம் மன்றின் முழு விதிப்பானவுடன் இவ்வழக்கின் வழக்காளி தனது கன்னிப்பெயரான கோவிந்தராஜா மகள் கேதீஸ்வரி என பெயரை மீளப்பெற்று மண மாகாத பெண்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் அனுபவித்து வரலாமென இம்மன்று கட்டளையிட்டுத் தீர்வையளிக்கின்றது.

2008ஆம் ஆண்டு சித்திரை மாதம் 23ஆம் திகதி
என்னால் வரையப்பட்டது
(கனகரத்தினம் அசோசியேட்ஸ்)
வழக்காளியின் சட்டத்தரணி

ஒப்பம்- இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி
மாவட்டமன்று
யாழ்ப்பாணம்.

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

(1177)

## இன்று ஒரு தகவல்

# பேசாவிரதம்

''நாங்கள் இரண்டுபேரும் ஒருவருக்கொருவர் பேசுவதே இல்லை'' என்று ஒருவர் சொல்கிறார் என்றால் அவர்களுக்குள் ஏதோ மனஸ்தாபம் என்று அர்த்தம்.

அதேவேளை, ஒருவருக்கொருவர் பிடிக்கவில்லை என்றால் பேசாமல் இருப்பதும் சில நாட்களில் சமாதானமாவதும் மனித இயல்பு.

ஏதாவது மனஸ்தாபம் என்றால் ஒருவருக்கொருவர் தர்க்கம் செய்வதைவிட பேசாமல் இருப்பது எவ்வளவோ நல்லது. இப்படி ஒரு வழி இருப்பதால் தான் இன்றைய கால கட்டத்தில் அநேக குடும்பங்கள் ஒற்றுமையாக வாழ்கிறார்கள்.

கணவன், மனைவிக்கிடையில் கோபம் வந்துவிட்டால் உடனே ஒருவருக்கொருவர் பேசாமல் இருப்பது சக ஜம். ஒருசில பேர் கொஞ்ச நாட்களுக்கு பேசாமல் இருப்பார்கள். சிலர் வருஷக்கணக்கில் கூட பேசாமல் இருப்பார்கள். ஆனால் ஒரு தம்பதியினர் 50 வருடங்களாக பேசாமல் இருந்தார்கள் தெரியுமா?

புடாபெஸ்ட் நகரத்தில் வாழ்ந்த ஹெல்லி தம்பதிகள் தான் அவர்கள். 1989 இல் அவர்களுக்குள் சின்ன சச்சரவு ஏற்பட்டது. அதனால் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதேயில்லை.

ஆனாலும் யார் முதலில் பேசுவது என்பதில் போட்டியும் இருந்தது. இப்படியே 50 வருடங்கள் கடந்து விட்டன. பேச்சைத்தான் நிறுத்தினார்களே தவிர, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியவேயில்லை. ஏழு குழந்தைகள் வேறு இருக்கிறார்கள். ஆனால் பேசுவதே இல்லையாம்.

புகழ்பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் விக்டர் ஹியூகோவின் மகள் அடலி 65 வருடமாக யாருடனும் பேசவில்லையாம். ஏனென்றால், அந்தப் பெண் தனது 20 வயதில் ஆங்கில மதகுரு ஒருவரின் மகனை (அல் பிறெட் பின்ஸென்) காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

கொஞ்ச நாட்களில் அந்தப் பையனுக்கு இந்த பெண்ணைப் பிடிக்கவில்லை. அதனால், அவன் வெறுத்து ஒதுக்க தனது தந்தையுடனேயே வந்து சேர்ந்தார். அதன் பிறகு 65 வயதில் சாகும்வரை யாருடனும் கதைக்கவேயில்லையாம்.

அமெரிக்காவில் டென்வர் நகரத்தில் ஹிராம் சில்கோர் என்பவர் வாழ்ந்தார்.

ஒருநாள் அவர் வேலையிலிருந்து களைத்துப் போய் வந்துள்ளார். இதேநேரம் மனைவி துணி துவைத்துக் கொண்டிருந்திருக்கிறார். சாப்பாடும் செய்து வைக்கவில்லையாம். அவ்வளவு தான் இவருக்கு கோபம் வந்து விட்டது. உடனே பேச்சை நிறுத்திக்கொண்டாராம்.

21 வருடமாக மனைவியுடன் பேசுவதே இல்லையாம். லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஏவாவில்மர் என்று ஒருவர் இருந்தார். தன் மனைவிக்கு திருமண ஆண்டு விழா பரிசு ஒன்றும் வாங்கிக்கொடுக்கவில்லையாம். இதனால் 9 வருடமாக பேச்சை நிறுத்தி விட்டாராம் அவரது மனைவி.

பெல்பாஸ்ட் நகரத்தில் ஜான்டிம் என்று ஒருவர் தனது மனைவியுடன் 14 வருடமாக கதைக்கவில்லையாம். நம்ம ஊர் ஆள் ஒருத்தர் அழுது கொண்டிருந்தார். ''ஏனப்பா அழுகிறாய்?'' என்று கேட்டேன். ''என் மனைவி 10 வருஷமாக என்னுடன் பேசமாட் டேன் என்று சபதம் போட்டுவிட்டாள் சார்'' என்றார் அவர்.

''அதுக்குப்போய் யாராவது அழுவார்களா?'' என்றேன். ''சார்!'' நான் அதற்காக அழவில்லை! அந்த புத்து வருஷம் இன்றுடன் முடிந்துவிட்டது சார் என்று சொல்லி விட்டு மீண்டும் கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# தேர்தல் வன்முறைகளை விரைவில் அம்பலமாக்குவோம் - ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அரசாங்கம் எவ்வாறு மோசடிகளில் ஈடுபட்டிருந்தது என்பதை ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா



முஸ்லிம் காங்கிரசும் இணைந்து ஆதாரத்துடன் வெளியிடும் என முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

''அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குத் தோல்வி ஏற்படுமென அரசாங்கத்தின் தேர்தல் தொடர்பான ஆய்வாளர்கள் கூட தேர்தலுக்கு முன்னர் கூறியிருந்தனர்.

என்னுடன் கதைத்த அரசாங்க அமைச்சர்கள் பலர் அம்பாறை மாவட்டத்தை தாம் இழக்கப் போகிறோம் எனக் கூறியிருந்தனர். இதனால் ஏற்பட்ட அச்சம் காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அனைத்துச் சட்டங்களையும் மீறி கிழக்கு மாகாண மக்கள் தம்மை ஆள்வதற்கான கட்சியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மீறப்பட்டுள்ளது'' என ஹக்கீம் குறிப்பிட்டார்.

''இவ்வாறிருந்த போதும் கிழக்கு மாகாண மக்கள் அரசாங்க அமைச்சர்களால் ஏற்படுத்தப்பட்ட வன்முறைகளைக் குறைத்ததுடன், வன்முறைகளுக்கு எதிராகப் போராடி வாக்களித்துள்ளனர். மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட் டங்களில் தமிழ் மக்களின் வாக்கு களை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளைப் பயன்படுத்தி அரசாங்கம் தானாகவே நிரப்பிக்கொண்டது'' என முஸ்லிம் காங்கிரசின் தலைவர் குற்றஞ் சாட்டினார்.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பகுதிகளில் அரசாங்க அமைச்சர்களால் ஏற்படுத்தப்பட்ட குழப்பங்களைத் தடுத்து பதில் நடவடிக்கை எடுத்த வாக்காளர்களுக்குத் தலைவணங்குவதாக ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார். பிள்ளையான் தேர்தல் சட்டங்களை மீறியுள்ளார் என்பதற்கான போதியளவு ஆதாரங்கள் இருப்பதாகவும் இதனை ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து விரைவில் வெளிப்படுத்த இருப்பதாகவும் முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் மேலும் கூறியுள்ளார். (அ-5)

# ஜே.வி.பி.யின் அதிருப்தியாளர்களுக்கு பாரிய அளவில் அரச சலுகைகள்

(கொழும்பு)

கட்சியிலிருந்து பிரிந்துசென்ற ஜே.வி.பி.யின் அதிருப்தியாளர்கள் 10 பேருக்கும் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தியமைக்காக ஆளும் கட்சியால் அரசாங்கச் செலவில் பாரிய அளவில் சலுகைகள் வழங்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுதந்திரமாகச் செயற்படப்போவதாக பாராளுமன்றத்தில் அறிவித்த ஜே.வி.பி.யின் உறுப்பினர்கள் தமக்கு அமைச்சர்கள் அனுபவிக்கும் வசதிகள் வழங்கப்படவேண்டுமெனக் கோரியிருப்பதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு மிகவும் நெருக்கமான இரத்தினபுரி பாராளுமன்ற உறுப்பினர் அச்சல ஜெயகொட, பாராளுமன்ற கடிதத்தலைப்பில் ஆடம்பரமான தங்குமிடமொன்றை வழங்குமாறு கோரி பொது விவகார அமைச்சர் கரு ஜெயசூரியவுக்கு கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி கடிதமொன்றை அனுப் பிவைத்திருப்பதாக அந்த ஊடகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமல் வீரவன்சவுக்கு ஏற்கனவே ஒரு வசதியான தங்குமிடமொன்று ஒதுக்கப்பட்டிருப்பதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்சியிலிருந்து பிரிந்துசென்று ஒரு வாரத்துக்குள் அவருக்கு உத்தியோக பூர்வ இல்லம் வழங்கப்பட்டுள்ளது என அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய விமல் வீரவன்சவின் பாதுகாப்புக்கு கொமாண்டோப் படையினர் ஈடுபடுத்தப்பட்டதாகவும் இரகசிய உடன்படிக்கைக்கு அமையவே ஜே.வி.பி.யின் அதிருப்தியாளர்கள் செயற்பட்டுவருவதாகவும் அந்த ஆங்கில ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-5)

## இராசிபலன்

13.05.2008
(சித்திரை 31இசெவ்வாய்க்கிழமை)
மகம் முன்னிரவு 06.26 மணிவரை
நவமி பின்னிரவு 01.50 மணிவரை
இராகுகாலம் 02.53-04.23 மணிவரை
சுபநேரம் 10.23-11.53 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | காரிய இடையூறு, புத்திரரால் கவலை, தனவிரயம், வியாபார நன்மை. |
| இடபம் | அற்பர் உறவு , ரோக பயம், கல்வியில் ஆர்வம். |
| மிதுனம் | இனிய அனுபவம், வாக்குமேன்மை, புதிய பொருள்சேர்க்கை. |
| கடகம் | மதிப்புக்குறைவு, பொருள் விரயம், காரிய தாமதம், ரோகபயம். |
| சிங்கம் | ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, சயனசுகம், புதிய முயற்சி. |
| கன்னி | உஷ்ணநிலை, பணவிரயம், தந்தைவழி உறவு, முயற்சி தாமதம். |
| துலாம் | தொழில்சிந்தை, மன மகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும். |
| விருச்சிகம் | பெரியோர் உதவி, சுபநிகழ்வு, கடின முயற்சி, அதிகாரம். |
| தனுசு | உடல்உழைப்பு, அச்சமான நிலை, வயிற்றுக்கோளாறு. |
| மகரம் | எதிர்பாராத அச்சம், காரிய தடங்கல், போசனசுகம், அபகீர்த்தி. |
| கும்பம் | வாகனவசதி, அபூர்வ சந்திப்பு, பணவருவாய், முயற்சி கைகூடும். |
| மீனம் | சுகவாழ்வு, தீர்ப்பயணம், காரிய நன்மை, போசனசுகம். |

வளவன்

# 'கிழக்கின் உதயம்' திட்டத்தின் கீழ் ரூபா 340 மில்லியன் முதலீடு

(கொழும்பு)

கிழக்கின் ''உதயம்'' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், இலங்கையின் பிரபல ஆடை உற்பத்தி நிறுவனமான ''பிரான்டிக்ஸ் குழுமம்'' நிறு வனம் கிழக்கில் புதிய திட்டங்களில் முதலீடு செய்யவுள்ளது.

இதற்கமைய, ரிதி தென்ன, வெலிகந்த, புணானை ஆகிய பிரதேசங்களில் ''பிரான் டிக்ஸ்'' குழுமத்தின் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப் பட விருக்கின்றன.

இந்தத் திட்டங்களுக்கு மொத்தமாக 340 மில்லியன் ரூபாக்களை பிரான்டிக்ஸ் குழுமம் முதலீடு செய்யவுள்ளது. இதனூடாக தற்போதைய நிலையில் 455 நேரடித் தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும் எனவும் இந்த எண் ணிக்கை 2500ஆக அதிகரிக்கப்படும் எனவும் ''பிரான்டிக்ஸ்'' நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்திற்காக 10 ஏக்கர் நிலத்தினை மகாவலி அதிகாரசபை ''பிரான்டிக்ஸ்'' குழுமத்திற்கு கையளித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காகவும். உள்ளூர் பொருளாதாரத்தை கட்டி யெழுப்பவும் முதலீடுகள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (அ-5)



அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மங்கல விளக்கேற்றுவதை ,ம் வித்தியாலய அதிபர் திருமதி சி.ஜெயக்குமார் அருகி நிற்பதையும் படத்தில் காணலாம்.

## மீளாய்வுக் கூட்டம்

(அல்வாய்)

உலக உணவுத் திட்டவேலைகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை 10 மணியளவில் யாழ் அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே இதுசம்பந்தமான ஆவணங்களுடன் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (இ)




## தமிழ்த்துறைக் கருத்தரங்கு

'உலகச் செம்மொழி வரிசையில் தமிழ் மொழி' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக் கழக கலைப்பீட புதிய விரிவுரை மண்டபத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் கருத்துரை வழங்கவுள்ளார். அனைவரையும் கலந்து பயன் பெறுமாறு தமிழ்த் துறையினர் அழைத்துள்ளனர். (இ)

# உரிமைமாற்ற ஆவணங்கள் கிடைக்காதோர் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்

## யாழ்.போக்குவரத்து ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள் களுக்கான உரிமை மாற்றம் செய்வதற்காக கடந்த வருடம் 607விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவற்றில் 39விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு உரிமைகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட போக்குவரத்து ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்தார்.

எனினும் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத 216விண்ணப்பங்கள் உரிமை மாற்றம் செய்யமுடியாத வகையில் தேக்க நிலையில் இருப்பதாகக் குறிப்பிட்ட வி.பத்மநாதன் இதுவரை உரிய உரிமை மாற்றம் தொடர்பான ஆவணங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் மாவட்ட மோட்டார் திணைக்கள அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுள்ளார். (அ-5)

# பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு கல்வி வழங்கும் செயற்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் அனுசரனையுடன் வலிகாமம் 'கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவால் பாடசாலை செல்லாத, பாடசாலை சென்று பல்வேறு காரணங்களால் இடை விலகிய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு கல்வி வழங்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இச்செயற்றிட்டமானது இனங்காணப்பட்ட ஒன்பது கிராமங்களில் தொடர்ந்து நடத்தப்பட்டு பாடசாலை செல்லாத, இடைவிலகிய மாணவர்களுக்கு எதிர்வரும் 20ஆம் திகதி எழுத்தறிவூட்டல் நிலையங்கள் மூலம் கல்வி வழங்கப்படவுள்ளது. (அ)



யுனிசெவ் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவால் பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு கல்வி வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த 9ஆம் திகதி சுன்னாகம், கண்ணகி குடியிருப்பு முகாமில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு கருத்தரங்கில் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும், யுனிசெவ் செயற்திட்ட இணைப்பாளர் சு.கணேசலிங்கம், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் செல்வி வே.ராதிகா மற்றும் எழுத்தறிவூட்டல் ஆசிரியர் த.மகாதேவன், முறைசாராக் கல்வி செயற்திட்ட அலுவலர் ந.சண்முகராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், பங்குபற்றிய பெற்றோர், பிள்ளைகளை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# பாடநூல்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை தீவகக் கல்வி வலய மாணவர் அசௌகரியம்

(வேலணை)

பாடசாலைகளில் இரண்டாம் தவணை ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் முடிவுறும் நிலையிலும் தீவகக் கல்வி வலயத்துக்கான பாட நூல்கள் இன்னும் முழுமையாக கிடைக்கவில்லை என தீவகக் கல்வி வலய கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். புதிய பாடத்திட்டத்திற்குத் தேவையான கணிதம், தமிழ் ஆகிய 11 ஆம் தர மாணவர் களுக்கான நூல்கள் இதுவரை வழங்கப் படவில்லை .

மாணவர்களுக்கு உரியநேரத்தில் பாட நூல்கள் வழங்கப்படாத நிலையில் அடைவு மட்டம் குறைந்தே காணப்படும் என ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (அ-5)

## மேலதிக கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தீவகம் உட்பட்ட கஷ்ரப் பிரதேசங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அமெரிக்க வாழ் யாழ் வைத்தியர்களின் சர்வதேச மருத்துவ சுகாதாரக் கழகத்தின் நிதி உதவியுடன் விசேட கொடுப்பனவாக மாதாந்தம் ரூ.10 ஆயிரம் வழங்கப்படுவதாக யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ-5)

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

வேலணை மேற்கு பெரியபுலம் அருள் மிகு மஹா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) கோவிலின் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா, மஹோற்சவப் பெருவிழாவின் 6 ஆம் நாளான நாளை புதன்கிழமை 11மணியளவில் நடைபெறவுள்ளது. (அ)

# ஊழியர் சேமலாப நிதி -உறுப்பினர் கணக்கு இலக்கத்தை மாற்றும் பணி

## யாழ்.அலுவலகத்தில் ஆரம்பம்

ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்களின் தற்போதைய ஊழியர் சேமலாப நிதி கணக்கு பல்வேறு குறைகளைக் கொண்டுள்ளது. இக் குறைபாடுகளை நிவர்த்திக்கும் முகமாகவும் ஊழியர் சேமலாபநிதி மீளப்பெறுதலை இலகுவாக்குவதற்குமாக ஊழியர் சேமலாப நிதி கணக்கினை அங்கத்தவர்களின் தேசிய அடையாள அட்டைக்கு மாற்றும் திட்டம் ஏனைய மாவட்டங்களில் ஏற்கனவே நிறைவு பெற்றுவிட்டது.

யாழ்.மாவட்ட தொழில் அலுவலகத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கான மேற்படி வேலைத்திட்டம் மாவட்டத் தொழில் அலுவலகத்தில் இம் மாதம் 21 ஆம்திகதி தொடக்கம் 31ஆம்தி திகதி வரையான காலத்தில் நடைபெறவுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அனைத்து தொழில் தருநர்களும் 21,22 ஆம் திகதிகளில் உரிய படிவங்களைப் பெற்றுக் கொள்வதுடன் தொழில் திணைக்கள உத்தியோகத்தர்களின் ஆலோசனையுடன் பூரணப்படுத்தி 29 ஆம்திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.உதவித் தொழில் ஆணையாளர் கே. கனகேஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)



பருத்தித்துறையில் நடைபெற்ற ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரின் மேதின விழாவில் கட்சியின் பிரமுகர் ஒருவர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## மஹோற்சவம்

[illegible] ஸ்ரீ விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகிறது.

இதில் 17 ஆம் திகதி சனிக்கிழமை சப்பரத் திருவிழாவும்,18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10.30 மணிக்கு இரதஉற்சவமும், 19 ஆம் திகதி திங்கட்கிழமை 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும். (இ)

◆◆◆

தென்கோவை அருள்மிகு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறவுள்ளது.

கொடியேற்றதினத்திற்கு முதல்நாள்(16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு பஞ்சமுகப் பிள்ளையார் சங்காபிஷேகமும் 30 ஆம்திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு சப்பறத்திரு விழாவும்,31ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும், யூன் மாதம் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும்.

ஏனைய நாட்களில் தினமும் காலை 10 மணிக்கும், மாலை 4.30 மணிக்கும் வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று சுவாமி வீதி உலா இடம்பெறும். (இ)

◆◆◆

காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரியம்மன் ஆலய மஹோற்சவம் 11ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 19 ஆம்திகதி தேர்த்திரு விழாவும் 20 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (அ)

## வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான மலடாக்கல் சத்திர சிகிச்சையும், கருத்தடை ஊசி ஏற்றலும் நாளை மறுதினம் வியாழக்கிழமை நாச்சிமார் கோவிலடி,வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.

இதில் ஆண் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை சிகிச்சையும், 8 மாதத்திற்கு மேற்பட்ட பெண் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை ஊசி ஏற்றலும் நடைபெறவுள்ளது. பொது மக்கள் தங்களது வளர்ப்பு நாய்களை அழைத்து வந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

## மாபெரும் கல்வி கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நாளை புதன்கிழமையும் நாளை மறுநாள் வியாழக்கிழமையும் காலை9மணி முதல் பிற்பகல் 3.30மணிவரை மாபெரும் கல்விக் கண்காட்சி நடைபெறவுள்ளது. இக் கண்காட்சி ஆரம்பப் பிரிவு மாணவர் முதல் க.பொ.த உயர்தர மாணவர்கள் வரை பயன் பெறக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் கல்லூரியின் பழைய மாணவரும் யாழ். பல்கலைக் கழக பட்டப் பின் படிப்புகள் பீடாதிபதியுமான கே.கந்தசாமி கண்காட்சியை ஆரம்பித்துவைப்பார்.

கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான சு.சுந்தரசிவம், திருமதி சா.நாகராசா, தமிழ்மாறன், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன் ஆகியோரும் துறைசார் விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் கண்காட்சியை பார்வையிடுவதற்கு வசதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் அறிவித்துள்ளார். (இ)

# சீனாவை உலுக்கிய பாரிய பூமியதிர்ச்சி ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் பலி

## கட்டட இடிபாடுகளுக்குள் 900 சிறுவர்கள்



சீனப் பூகம்பத்தில் இடிபாடுகளில் சிக்கிய பாடசாலை மாணவர்களின் சடலங்கள் தேடப்படுகின்றன...

(பீஜிங்)

தென்மேற்கு சீனாவிலுள்ள சிசுவான் மாகாணத்தை நேற்று திங்கட்கிழமை தாக்கிய 7.8 ரிச்டர் பூமியதிர்ச்சி காரணமாக சிறுவர்கள் உட்பட 5ஆயிரம் பேர் பலியானதுடன் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி பூமியதிர்ச்சி காரணமாக இரு பாட சாலை கட்டடங்கள் இடிந்து விழுந்தமை காரணமாக அங்கிருந்த சுமார் 900 சிறுவர்கள் புதையுண்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

இப் பூமியதிர்ச்சியையடுத்து சீனாவின் அதியுயர்ந்த கட்டடமான ஜின்மாவோ கோபுரத்திலிருந்தும் ஏனைய உயர்ந்த கட்டடங்களிலிருந்தும் மக்களை வெளியேறும்படி உத்தரவிடப்பட்டது.

சீனாவில் இடம்பெற்ற இப்பூமியதிர்ச்சி தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக், வியட்நாமின் ஹனொய் நகர் ஆகிய இடங்களிலும் உணரப்பட்டது.

சிசுவான் மாகாண தலைநகரான செங்துவிலிருந்து 57 கிலோமீற்றர் தொலைவில் நேற்று அந்நாட்டு நேரப்படி பிற்பகல் 2.28 மணிக்கு தாக்கிய பூமியதிர்ச்சியால் செங்து நகரிலோ அல்லது அதற்கு அருகாமையிலுள்ள திறீ ஜோர்ஜெஸ் அணையிலோ பிரதான சேதமெதுவும் ஏற்படவில்லை என அந்நாட்டு அரச தொலைக்காட்சி அறிக்கையிட்டுள்ளது.

எனினும் மேற்படி நகரக் கட்டடங்களிலிருந்து மக்கள் பாதுகாப்புக் கருதி வெளியேற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் செங்துவிலிருந்து 930 மைல்கள் தொலைவிலுள்ள சீனத்தலைநகர் பீஜிங்கிலுள்ள பல கட்டடங்கள் இப்பூமியதிர்ச்சியின்போது சுமார் இரு நிமிடங்களுக்கு நடுக்கம் கண்டதாக தெரிவிக்கப்படுகிறது.



இதனையடுத்து மக்கள் கட்டடங்களை விட்டு அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீட்புப்பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இறந்தவர்களின் தொகை மென்மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## நல்லை ஆதீனத்தில் விடந்தீர்த்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சைவ சமயக் குரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் இறையருளால் செய்த அற்புத நிகழ்வுகளைச் செய்துவரும் நல்லை ஆதீனத்தில் இன்று மாலை 5.30 மணிக்கு வணிகனுக்கு விடந்தீர்த்த உற்சவம் நடைபெறவுள்ளது.

மாலை 5 மணிக்கு ஆதீனத்தில் இருந்து புறப்படும் ஞானசம்பந்தப் பெருமான் 5.30 மணியளவில் நல்லூர் சிவன் கோவிலைச் சென்றடைந்து அங்கு விடந்தீர்த்த உற்சவம் இடம்பெறும். (ச)

## மகிந்தவின் ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் கிழக்கு மக்கள் நல்ல பாடம் புகட்டியுள்ளனர்.

கிழக்கு மாகாண சபைத்-தேர்தலில் பாரிய வன்முறைகள் இடம்பெற்றதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சுமத்துகின்றது. அந்தக் குற்றச்சாட்டுக்களில் எந்த உண்மையுமில்லை. அரசாங்கத்திற்கு எதிராகவே வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.

தேர்தலுக்கு முன்னர் அம்பாறையில் விடுதலைப்புலிகள் குண்டுத் தாக்குதலை நடத்தியிருந்ததுடன் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மோட்டார்த் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். இதனால் அரசாங்கத்திற்குக் கிடைக்கவிருந்த வாக்குகளே குறைவடைந்துள்ளன என்று அமைச்சர் கூறினார்.

இதேவேளை கிழக்கு மாகாண சபையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து அந்தக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் இருப்பதா என்பது பற்றி அவர் முடிபெடுக்க வேண்டுமென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக இடம்பெற்ற தேர்தல் வன்முறைகளால் அரசாங்கத்துக்கே வாக்கு குறைவடைந்துள்ளது. இந்தத் தேர்தலுக்கு எதிராக நீதிமன்றம் செல்லப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது.

முடிந்தால் நீதிமன்றம் சென்று வெற்றிபெறட்டும் என அமைச்சர் சவால் விடுத்தார். வடக்குக் கிழக்கை இணைக்கப் போவதாகக் கூறி விடுதலைப்புலிகளுடன் கூட்டிணைந்து செயற்பட்ட முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ் ஹக்கீமை கிழக்கிலிருந்து விரைவில் மக்கள் வெளியேற்றுவார்கள் என அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஆரம்பகட்டமாகவே ஹக்கீமை மக்கள் தோ[illegible]த்திருப்பதாக அமைச்சர் நேற்று கொழும்பி[illegible] நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கூறியுள்ளார். (ச-5)

# தற்கொலைக் குண்டுத்தாக்குதலிலேயே திருமலையில் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது

## கடற்படைப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை அஷ்ரப் இறங்குதுறையில் கடந்த 10 ஆம் திகதி மூழ்கடிக்கப்பட்ட கப்பல் தற்கொலைக் குண்டுதாரியாலேயே வெடிக்க வைக்கப்பட்டிருப்பதாக கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி.தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கடற்படையின் சுழியோடிகள் மறுநாள் நீருக்கடியிலிருந்து வெடித்த மனிதச் சடலத்தின் பகுதிகளை மீட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

தற்கொலைக் குண்டுதாரியின் உடல் சடலங்களையும் நீருக்கடியில் செல்வதற்கான சாதனங்களையும் எமது சுழியோடிகள் மீட்டுள்ளனர் என கடற்படைப் பேச்சாளர் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கூறினார்.

தற்கொலைக் குண்டுதாரி, தற்கொலை அங்கியை பயன்படுத்தியதால் உடலின் பெரும்பகுதி காணாமல் போயிருப்பதாக கடற்படை தெரிவித்துள்ளது.

மூழ்கடிக்கப்பட்ட கப்பலை மீட்பதற்கு கடற்படை சுழியோடிகள் முயற்சி மேற் கொண்டிருப்பதுடன், அந்தப் பகுதி மிகவும் ஆழமானது இல்லையென்பதால் குறுகிய காலத்தில் கப்பலை மீட்டுவிடமுடியும் என கடற்படைப் பேச்சாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் திருகோணமலை அஷ்ரப் இறங்கு துறையில் தரித்து நின்ற கடற்படையினரின் சரக்குக் கப்பல் ஒன்றை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்திருந்தனர்.

கடற்கரும்புலிகள் இத்தாக்குதலை நடத்தியதாக விடுதலைப் புலிகளின் அறிக்கையொன்றை மேற்கோள் காட்டி தமிழ் நெற் இணையத்தளம் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


## 'இலங்கை வங்கிக் கிராமம்'

(யாழ்ப்பாணம்)

'இலங்கை வங்கிக்கிராமம்' ஆரம்ப விழாவும் விளையாட்டு விழாவும் நேற்று கரணவாய் சோளங்கன் கிராமத்தில் நடைபெற்றது. இலங்கை வங்கியின் நெல்லியடிக்கிளை இந்நிகழ்வை நடத்தியது.

இதன் பிரகாரம் இலங்கை வங்கி சோளங்கன் கிராமத்திலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் சிறுதொகைப் பணத்துடன் வைப்பை ஆரம்பித்து தனது வாடிக்கையாளர்களாக்கியது.

இலங்கை வங்கியின் வடபிராந்தியத்தில் முதலாவது இலங்கை வங்கி கிராமமாக சோளங்கன் கிராமத்தில் இந்நிகழ்வு நடைபெற்றுள்ளது. இக்கிராமத்திலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் இலங்கை வங்கி முன்னேற்ற முயற்சிகளுக்கு கடனுதவி வழங்கி அக்கிராமத்தை அபிவிருத்தி செய்யுமென வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்.சீவரட்ணம் தெரிவித்தார். (ச-5)




நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம ஆலய பாலசம்ரட்ஷண முருக பக்திப் பாடல்கள் ஒலி, ஒளி இறுவட்டு வெளியீட்டு விழாவில் இறுவட்டின் முதற் பிரதியை திருமதி பாலசுந்தரம்பிள்ளையிடமிருந்து மா.மங்களேஸ்வரன் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

## வத்தேகம பகுதியில் 8பேர் கைது

வத்தேகம உன்னஸ்கிரிய பகுதியில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் எட்டுப் பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான சிலர் இப்பகுதியில் தங்கியிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என வத்தேகம பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

ஆனந்தி திருமண சேவை

மணமகள் தேவை

கொழும்பில் எயர்லங்காவில் ரிக்கெற்றிங் ஆபிசராக தொழில் புரியும் ஏராளர் இனத்தைச் சேர்ந்த மிருகசீரிடம் 4-ம் பாதம் 363/4 கிரகபாவ சங்கியை; ஆட்சி பெற்ற உதயச் செவ்வாய்; உயரம் 5 அடி 3 அங்கு; கவர்ச்சியும் வனப்பும் உடைய 1977 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு உள்ளூர், வெளியூரில் மணமகளைத் தேடுகின்றோம். அஞ்சல், நேரடியாக தொலைபேசி (0212228708) மூலம் தொடர்பு கொள்ளலாம். V.A .சிவராசா 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (1176)

# டில்லி டேர் டேவில்ஸ் அணியை வீழ்த்தி வோர்ன் அணியின் ஆதிக்கம் தொடர்கிறது

(ஜெய்ப்பூர்)


வோட்சன் அதிரடி அரைச்சதம் விளாச, வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இவ் வெற்றியின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் பெறும் 7-வது வெற்றி இதுவாகும். இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது -20 தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் இரவு ஜெய்ப்பூரில் நடைபெற்ற லீக் சுற்றின் 33-வது போட்டியில் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றேயல்ஸ் அணியும் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஷேன் வோர்ன் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய டில்லி டேர் டேவில்ஸ் அணி ஆரம்பத்தில் சொதப்பலாக ஆடியபோதும் மஹ்ரூப்பின் அதிரடியான ஆட்டத்தால் மீண்டு, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில்7 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பர்வேஷ் மஹ்ரூப் 16 பந்துகளில் (2பவுண்டரிகள்,4 சிக்ஸர்கள் உட்பட) 39 ஓட்டங்களையும் காம்பீர் 23 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட)31 ஓட்டங்களையும் மற்றும் டிவில்லியர்ஸ் 20, டில்சான் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.



வோட்சன்

பந்துவீச்சில் மஸ்கரன்ஸி, வோட்சன் மற்றும் திரிவெடி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 157 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, ஷேன் வோட்சனின் அதிரடியான அரைச்சதத்தின் மூலம் 19.1 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் ஷேன் வோட்சன் 40 பந்துகளில் (5 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் உட்பட) 74 ஓட்டங்களையும் சிமித் 24 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் மிஸ்ரா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இவ்வெற்றியின் மூலம் ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணி,தான் ஆடிய 9-வது ஆட்டத்தில் 7-வது வெற்றியைப் பெற்று புள்ளிகள் அடிப்படையில் தொடர்ந்து முதலாவது இடத்தைப் பெற்றது.

இதேவேளை தோல்வி அடைந்த சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணி, தான் ஆடிய 8-வது போட்டியில் சந்திக்கும் 4-வது தோல்வி இதுவாகும். (5)

## வோர்ன் அணியின் வெற்றியின் ரகசியம்


ஐ.பி.எல். தொடரில் ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தொடர் வெற்றிக்கான பின்னணி என்ன என்பது தற்போது தெரியவந்துள்ளது.

வோர்ன் அணிவீரர்கள் ஒருவரையொருவர் செல்லமாக பட்டப்பெயர்கள் மூலம் அழைத்துக்கொள்கின்றனர். இதனால் நாடு, கலாசாரம் போன்ற வேறுபாடுகளை மறந்து நட்புணர்வோடு நன்கு பழகுவதுடன், மைதானத்தில் ஒற்றுமை உணர்வுடன் விளையாடி அணிக்கு வெற்றி தேடித் தருகின்றனர். அதிரடி வீரர் யூசுப் பதானுக்கு வைக்கப்பட்டுள்ள செல்லப் பெயர் 'பிளாஸ்டர்' இந்தப் பெயருக்கேற்ப அவரும் எதிரணியின் பந்து வீச்சை பவுண்டரிகளுக்கு விரட்டி வருகிறார். மற்றொரு வீரரான கோவாவைச் சேர்ந்த அஸ்னோட்கருக்கு வைக்கப்பட்டுள்ள பெயர் 'கோவா டைனமோ', இவரும் தன்னுடைய பட்டப்பெயருக்கு ஏற்ப சிறப்பாக விளையாடி அணிக்கு நல்ல ஆரம்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

தன்னுடைய வீரர்கள் இவ்வாறு நட்புடன் பழகி வெற்றி மேல் வெற்றி பெற்றுத் தருவதை நினைத்தால் பெருமையாக இருப்பதாக அணித்தலைவர் வோர்ன் குதூகலமடைகிறார்.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி தனது 8 போட்டிகளில் 6 ஆட்டங்களில் வெற்றியீட்டி 12 புள்ளிகளுடன் முதலிடத்தில் காணப்படுகிறது. (5)

# கங்குலியின் சிறப்பான ஆட்டத்தால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் வெற்றி



டேவிட் ஹசி

(ஐதராபாத்)

கங்குலியின் சிறப்பான ஆட்டத்தால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 23 ஓட்டங்கள் வித்தியாசத்தால் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது.

ஐ.பி.எல் இருபது -20 தொடரில் நேற்று முன்தினம் மாலை ஐதராபாத்தில் நடைபெற்ற லீக் சுற்றின் 32-வது ஆட்டத்தில் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி; கங்குலி, டேவிட் ஹசியின் அதிரடியான அரைச் சதத்தின் உதவியுடன் இருபது ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 204 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் கங்குலி 57 பந்துகளில் (11 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் உட்பட) 91 ஓட்டங்களை எடுத்து சதம் பெறும் வாய்ப்பை நழுவ விட்டு ஆட்டமிழந்தார்.

டேவிட் ஹசி 29 பந்துகளில் (4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 57 ஓட்டங்களை எடுத்தார்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 205 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி வேணுகோபால் ராவ் அதிரடியாக ஆடிய போதிலும் இருபது ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 23 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

இதில் சிறப்பாக ஆடிய வேணுகோபால் ராவ் ஆட்டமிழக்காமல் 42 பந்துகளில் (4 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் உட்பட) 71 ஓட்டங்களையும். றோகித் சர்மா 33 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் டின்டா 3 விக்கெட்டுக்களையும் கங்குலி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின்தலைவர் கங்குலி தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தான் ஆடிய 8-வது போட்டியில் பெறும் 4-வது வெற்றியாகும்.

இதேவேளை இத் தோல்வி மூலம் லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 9-வது ஆட்டத்தில் சந்திக்கும் 7-வது தோல்வி ஆகும். (5)

# இந்தியப் பெண்கள் அணி 4-வது முறையாக ஆசிய சம்பியன்

(குருநாகல்)

இந்தியப் பெண்கள் அணி தொடர்ந்து நான்காவது முறையாக ஆசியக் கோப்பையை கைப்பற்றி சாதனை படைத்துள்ளது.

இறுதிப் போட்டியில் ஆஷா ராவத் 91 ஓட்டங்கள் விளாச இந்திய அணி இலங்கையை 177 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது.

இந்தியா,பாகிஸ்தான், இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள் பங்கேற்ற ஆசியக் கோப்பை பெண்கள் கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடந்தது.

லீக் சுற்றுப் போட்டிகள் முடிபடைந்த நிலையில் முதலிரண்டு இடங்களைப் பிடித்த இந்திய, இலங்கை அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றன.



குருநாகலில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

### ஆஷா அதிரடி

இந்தியப் பெண்கள் அணியின் ஆரம்ப வீராங்கனைகள் ஜெயின் 28, ஜெயா சர்மா 0 விரைவாக வெளியேறி ஏமாற்றினர்.

இதனை அடுத்துக் களமிறங்கிய ஆஷா ராவத் அதிரடியாக ஆடினார். இவர் 112 பந்துகளில் (ஒரு சிக்ஸர் 12 பவுண்டரிகள் உட்பட) 97 ஓட்டங்களை எடுத்து சதம் கடக்கும் வாய்ப்பை நூலிழையில் நழுவவிட்டார்.

### மித்தாலி அரைச்சதம்

பின்னர் வந்த அணித்தலைவி மித்தாலி ராஜ் 66, ருமிலி தார் 50 பொறுப்புடன் விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை வலுவாக்கினார்.

இறுதியில் இந்தியப் பெண்கள் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 260 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து களமிறங்கிய இலங்கை பெண்கள் அணி, ஆரம்பத்திலேயே திணறியது. ஆரம்ப வீராங்கனைகள் சில்வா6, குமாரிகமி 23 மோசமான ஆரம்பத்தை தந்தனர். சிறிவர்த்தனா 20 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

ருமிலிதர், சீமா, நீத்து டேவிற் பந்துவீச்சில் மிரட்ட அடுத்து வந்த வீராங்கனைகள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் வெளியேறினார்கள் இதனால் இலங்கை அணி 35.2 ஓவர்களில் 83 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 177 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இந்தியா சார்பில் அபாரமாக பந்துவீசிய சீமா, நீத்து டேவிட் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் இந்தியப் பெண்கள் அணி தொடர்ந்து நான்காவது முறையாக ஆசியக் கோப்பையை வென்று சாதனை படைத்தது.

இறுதிப் போட்டியில் சிறப்பாக ஆடி 97 ஓட்டங்களை எடுத்த ஆஷா ராவத் ஆட்ட நாயகி விருதையும் தொடரில் சிறப்பாக விளையாடிய ருமிலி தர் தொடர் நாயகி விருதையும் பெற்றனர். (5)

# சம்பியன் கிண்ண தொடரை பாகிஸ்தானில் நடத்த உத்தரவாதம்

## ஐ.சி.சி.வழங்கியது

செப்டெம்பர் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் ஐ.சி.சி.சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெற் போட்டி பாகிஸ்தானில் நடைபெறும் என்று பாக்.கிரிக்கெற் சபைக்கு ஐ.சி.சி.உத்தரவாதம் அளித்துள்ளது. டுபாயில் நடைபெற்ற ஐ.சி.சி.கூட்டத்தில் பங்கேற்றுத் திரும்பிய பாகிஸ்தான் கிரிக்கெற் சபைத் தலைவர் நஸீம் அஷ்ரப் இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அதற்கு முன் பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து ஐ.சி.சி.திட்டமிடவுள்ளது என்று தெரிகிறது. முதலில் ஜூன் மாதம் ஐ.சி.சி.மேற்பார்வைக்குழு பாகிஸ்தான் சென்று கிரிக்கெற் போட்டிகளுக்கான ஏற்பாடுகளையும் பாதுகாப்' ஏற்பாடுகளையும் பார்வையிடுகின்றனர். அதன் பின்னரே இறுதி முடிவு தெரியவரும். இந்த ஐ.சி.சி.குழு பாகிஸ்தானில் பாதுகாப்பு குறித்து எதிர்மறையான அறிக்கை சமர்ப்பித்தால் போட்டித் தொடர் இலங்கைக்கு மாற்றப்படும்.

ஆனால், ஜூன் மாதம் ஐ.சி.சி.குழு பாகிஸ்தானில் போட்டிகளை நடத்தலாம் என்று கூறிவிடும் பட்சத்தில் அதன் பின்னர் அங்கு பாதுகாப்பு விவகாரங்கள் மோசமடைந்தால் சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெற் தொடர் ஒன்று ரத்து செய்யப்படவேண்டும் அல்லது ஒத்தி வைக்கப்பட வேண்டும். ஆனால் மாற்று இடங்களில் நடத்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# காய்ச்சல் வலிப்பு

எனது மகனுக்கு வயது ஒன்று ஆகின்றது. சென்றவாரம் அவனுக்கு காய்ச்சல் வலிப்பு வந்தது. தானே சில நிமிடங்களில் நின்றுவிட்டது. ஆயினும் வந்தபோது உடனடியாக வைத்தியரிடம் எடுத்துச் சென்றோம். அவர் பயப்பட வேண்டியதில்லை எனக் கூறினார். என்றாலும் குழந்தைக்குத் தொடர்ந்து வலிக்குமோ எனப் பயமாக இருக்கிறது. எதிர்காலத்தில் காக்காய் வலிப்பு வருமா? வலிப்பு வந்தால் உடனடியாக என்ன செய்வேண்டும்? விபரமாகச் சொல்லுங்கள்

பதில்: உங்கள் குழந்தைக்கு வந்தநோய் காய்ச்சல் வலிப்பு என்பதாகும். இதனை Febrile Fits அல்லது Febrile Convulsions என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். இது வளர்ந்த பிள்ளைகளிலும் வயதானவர்களிலும் வரும். காக்காய் வலிப்பு நோய்க்கான முன்னறிவிப்பு அல்ல என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

இது எப்போதாவது ஒருமுறைதான் குழந்தைகளுக்கு வருவதுண்டு. ஓரிரு வருடங் களுக்கு ஒருமுறைதான் பெரும்பாலும் குழந்தைகளுக்கு வருவதுண்டு. என்றாலும் கூட உங்கள் குழந்தைக்கு மீண்டும் காய்ச்சல் வலிப்பு வராது என உறுதியாகச் சொல்ல முடியாது. ஆயினும் நீங்கள் பயப்படத் தேவையில்லை. ஏனெனில் இந்த காய்ச்சல் வலிப்பு குழந்தைகளுக்கு நலக் கேட்டையோ, மூளைப் பாதிப்பையோ பொதுவாக ஏற்படுத்துவதில்லை.

### வலிப்பு வந்தால்

காய்ச்சல் வலிப்பு பெரும்பாலும் ஆறு மாதம் முதல் ஆறு வயதுவரையான குழந்தைகளுக்குத் தான் வருகிறது. வந்தாலும் சில செக்கன்டுகளிலிருந்து 5 நிமிடங்கள் வரைதான் நீடிக்கும். சிலவேளைகளில் 10 நிமிடங்களுக்கும் நீடிக்கலாம்.

♦ வலிக்கும்போது அந்தரப்படாது அமைதியாகச் செயற்படுவதன் மூலம் குழந்தைக்கு உதவுங்கள்.

♦ குழந்தையை பக்கவாட்டில் கிடத்தி வாயிலிருந்து நுரை சுலபமாக வெளியேறும்படி பார்த்துக்கொள்ளுங்கள். வாயில் உள்ள நுரையை துடைத்து எடுங்கள்.

♦ உடைகளை அகற்றி, உடல் வெப்பம் உள்ளடங்காமல் வெளியேற உதவுங்கள். வலிப்பு நீங்கள் குறிப்பிட்டது போல தானே நின்றுவிடும்.

10 நிமிடங்களுக்கு மேல் நீடித்தால் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுங்கள் வைத்தியர் Diazepam போன்ற மருந்துகளை நாளத்தினூடாக செலுத்தி வலிப்பை நிறுத்துவார். ஆயினும் வலிப்பு அவ்வளவு நேரம் நீடிப்பது மிகவும் அரிது.

காய்ச்சல் வலிப்பு வந்த குழந்தை சிறிது நேரத்திற்கு சோர்வாகவும் மயக்கமாகவும் இருந்துவிட்டு பின் சுயநினைவிற்கு வந்துவிடும். வலிப்பு தானாக நின்றாலும் வைத்தியரை சந்தித்து ஆலோசனை பெறுவது நல்லது.

### தடுப்பது எப்படி?

காய்ச்சல் வேகமாக ஏறி காயும்போது தான் பெரும்பாலும் வலிக்கிறது. எனவே காய்ச்சல் ஏறி காய்வதை தடுங்கள். காய்ச்சல் இருக்கும்போது குழந்தைகளை தடித்த துணிகளாலும் கம்பளி போன்ற துணிகளாலும் போர்த்தி மூடக்கூடாது. மிக மெல்லிய துணிகளிலான ஆடைகளையே அணியவேண்டும். அறையை நல்ல காற்றோட்டத்துடன் வைத்திருக்க வேண்டும். மின்விசிறியைப் போடலாம். குழந்தைக்கு குளிர் எடுத்தால் மாத்திரம் மெல்லிய போர்வையைப் பயன் படுத்துங்கள்.

ஸ்பொஞ்சிங் செய்யலாம். இதனால் சூடு குறையலாம். ஆனால் ஐஸ் தண்ணீர் வேண்டாம். வெதுவெதுப்பான நீரை உபயோகிக்கலாம். இவ்வாறு 30 நிமிடங்கள் வரை செய்து காய்ச்சல் குறையவில்லை எனில் பரசிற்றமோல் மருந்து கொடுங்கள். குழந்தையின் வயதுக்கு ஏற்ற அளவிலேயே கொடுக்க வேண்டும். ஆனால் வலித்துக் கொண்டிருக்கும்போது எதையும் வாய்மூலம் பருக்கக் கூடாது என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். ஏனெனில் வலிக்கும்போது குழந்தை மயக்கத்தில் இருக்கும். அப்பொழுது எதையாவது பருக்கினால் அது சுவாசக்குழாய் மூலம் சுவாசப்பையை அடைந்து மூச்சுத்திணறலை உண்டாக்கி உயிராபத்தில் முடிந்துவிடும். வலிக்கும்போது எதையும் குழந்தைக்கு பருக்கக் கூடாது. காய்ச்சல் மாத்திரைகளைக் கூட பருக்கக் கூடாது. வலிப்பு நின்று மயக்கம் தெளிந்து குழந்தை அழுதபின்தான் எதையும் பருக்க வேண்டும்.

**சிபாரிசு செய்யப்பட்ட அளவு**

| வயது | அளவு (மி.கி) | துளி | சிரப் மி.மி | பேபி மாத்திரை | வளர்ந்தோர் மாத்திரை |
|---|---|---|---|---|---|
| 3-6மாதம் | 40 | 1/2-1 | - | 1/3 | - |
| 6-12மாதம் | 60-80 | 1-1.5 | 2.5-4 | 1/2-2/3 | - |
| 1-2 வருடம் | 120 | - | 5.0 | 1 | - |
| 2-4வருடம் | 180 | - | 7.5 | 1.5 | - |
| 5-6வருடம் | 250 | - | 10 | 2 | 1/2 |
| 6-9வருடம் | 250-375 | - | 10-15 | 2-3 | 1/2-3/4 |
| 9-12வருடம் | 375-500 | - | 15-20 | 3-4 | 3/4-1 |

### பரசிற்றமோல் பாதுகாப்பானதா?

குழந்தைகளின் காய்ச்சலையும் வலியையும் தணிப்பதற்குப் பாதுகாப்பான மருந்து பரசிற்றமோல் தான். ஆனால் வயதுக்கேற்ற அளவையே கொடுக்கவேண்டும்.

வயதுக்கேற்ற அளவை மீறுவது ஆபத்தானது. அது ஈரல் சிதைவை ஏற்படுத்தி மரணத்திற்கு இட்டுச் செல்லும் ஆறுமணி நேரத்திற்கு ஒரு தடவை மட்டுமே கொடுங்கள். அத்துடன் வைத்திய ஆலோசனை இன்றி மூன்று நாட்களுக்கு மேல் பரசிற்றமோல் மருந்தைக் கொடுக்காதீர்கள்.




பனடோல், பஸிமோல், செற்றமோல், கல்பொல் என ஐம்பதிற்கு மேற்பட்ட பெயர்களில் இது கிடைக்கிறது. ஒரு மருந்திற்கு காய்ச்சல் குறையாவிடின் இன்னொரு பெயர் உள்ள பரசிற்றமோல் மருந்தைக் கொடுப்பது அளவை மீறி ஆபத்தாகலாம். சொட்டு மருந்து, சிரப், குழந் தைகளுக்கான பரசிற்றமோல், வழமை யான பரசிற்றமோல் என வயதிற்கேற்ற வடிவங்களில் கிடைக்கிறது.

5வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வளர்ந்தோர்களுக்கான பரசிற்றமோல் கொடுப்பது விரும்பத்தக்கது அல்ல. குழந்தையின் நிறைக்கேற்ப வைத்தியரின் மருந்தின் அளவில் சிறிது மாற்றத்தை செய்யக் கூடும்.

### தொடர்ச்சியாக மருந்து தேவைப்படுமா?

உங்கள் குழந்தைக்கு வலிப்பு ஒரு சில நிமிடங்கள் தான் நீடித்தது. தானாகவே நின்றுவிட்டது. மீண்டும் மீண்டும் வரவில்லை. எனவே தொடர்ந்து மருந்து கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் ஒரு சில குழந்தைகளுக்கு தொடர்ந்து மருந்து கொடுக்கவேண்டி நேரிடலாம்.

### தொடர்ச்சியாக சிகிச்சை தேவைப்படும் குழந்தை


♦ உடம்பின் ஒரு பக்கம் மட்டும் வலித்தல்
♦ 15 நிமிடங்களுக்கு மேல் வலிப்பு நீடித்தல்
♦ வருடத்தில் 5 அல்லது 6முறைக்கு மேல் காய்ச்சல் வலிப்பு வருதல்.
♦ லேசான காய்ச்சலுடன் வலித்தல்.
♦ பரம்பரையில் வலிப்பு நோய் இருத்தல்.
♦ குழந்தையின் மன வளர்ச்சி, மூளை வளர்ச்சி ஆகியவை பாதிப்படைதல்.

போன்ற நிலைகளில் தொடர்ச்சியான சிகிச்சை கிளினிக் முறையில் சென்று நீண்ட காலம் சிகிச்சையைத் தொடரவேண்டி நேரிடலாம்.

டாக்டர் எம்.கே.முருகானந்தன்

# பக்கவாத நோயைத் தடுக்கும் மக்னீசியம் நிறைந்த உணவுகள்

## மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்



மக்னீசியம் நிறைந்த தானியங்கள், காய்கறிகள் ஆகியவற்றை உணவாக உட்கொண்டால் புகை பிடிக்கும் பழக்கம் கொண்டவர்கள் பக்கவாதம் ஏற்படுவதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என ஆய்வு ஒன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுவீடனின் ஸ்டொக்ஹோம் நகரில் உ..ள்ள கரோலின்ஸ்கா இன்ஸ்ரிரியூட்டைச் சேர்ந்த சூசன்னா லார்சன் தலைமையிலான குழுவினர் பின்லாந்தில் அப் புகைப் பிடிக்கும் பழக்கம் கொண்ட சுமார் 26 ஆயிரம் ஆண்களிடம் ஆய்வு மேற்கொண்டனர்.

அதன்படி மக்னீசியம் மிகுந்த உணவை அதிகம் உட்கொண்டவர்களுக்கு பக்கவாதம் ஏற்படும் அபாயம் குறைவாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. மூளைக்கு செல்லும் இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படுவதற்கு காரணமாக இருக்கும் உயர் இரத்த அழுத்தத்தை குறைப்பதில் மக்னீசியம் முக்கிய பங்காற்றுவதும் தெரியவந்துள்ளது.

புகைப்பிடிக்கம் பழக்கம் உள்ளவர்களுக்கு மூளைக்கு செல்லும் இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. அவர்களுக்கு இருதய நோயும், புற்றுநோயும் ஏற்பட இது வழிவகுப்பதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

பின்லாந்தைச் சேர்ந்த 26ஆயிரத்து 556பேரிடம் 13ஆண்டுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவில் தினமும் 589மில்லிகிராம் மக்னீசியம் கலந்த உணவை உண்டவர்களுக்கு பக்கவாதம் ஏற்படும் வாய்ப்பு 15சதவீதத்திற்கும் குறைவாக இருப்பது தெரியவந்துள்ளது.

மக்னீசியம் கலந்த உணவை குறைவாக உட்கொண்டவர்களை விட இவர்களுக்கு இரத்தக்குழாயில் அடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புக் குறைவாக இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மக்னீசியம் கலந்த உணவை உட்கொள்ளும் 60வயதிற்கும் குறைவானவர்களுக்கு பக்கவாதம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு என்பது இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது

கல்சியம், பொட்டாசியம் மற்றும் சோடியத்திற்கும் பக்கவாதம் ஏற்படுவதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது .

இரத்த அழுத்தத்தையும் உடலில் கொழுப்புச் சத்து அதிகரிப்பதையும் மக்னீசியம் கட்டுப் படுத்துகிறது.

மக்னீசியம் மிகுந்த கறுப்பு பீன்ஸ், நிலக் கடலை ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொண்டால் பக்கவாதத்தை தடுக்கலாம் என சுவீடன் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் தெரிவித் துள்ளனர்.



கறுப்பு பீன்ஸ்; பசளைக் கீரை, முளை கட்டிய தானியங்கள், வாழைப்பழம், கோதுமை ரொட்டி, சோயாப்பால், சோயாப் பன்னீர், போன்றவை மக்னீசியம் நிறைந்த உணவு வகைகள்.

# சத்தான உணவைத்தான் சாப்பிடுகிறீர்களா?

ஏதாவது உடல்நிலை பாதிப்பு என்று டாக்டரிடம் போனால், 'மருந்து தர்றேன். முதல்ல நன்றாக சாப்பிடுங்க; உடலில் சத்துக்களே இல்லை' என்பார். சத்தான உணவு என்றால் என்ன? ரத்தம், எலும்பு, தசைகள், தோல், நரம்புகளுடன் பின்னிப் பிணைந்த இதயம், மூளை, கல்லீரல், நுரையீரல், குடல், சிறுநீரகம் போன்றவை கொண்டதுதான் உடல். அந்த உடலுக்கு சீரான ரத்த ஓட்டம் கிடைத்தால், பல உறுப்புகளுக்கு சத்துக்கள் கிடைக்கும். விட்டமின், புரோட்டீன், கார்போஹைட்ரேட் போன்ற சத்துக்கள் கிடைத்தால் தான் உறுப்புகள் முழுமையாக இயங்கும். எந்த வியாதியும் அண்டாது.

**சத்தான உணவு கிடைக்கவில்லை என்பதற்கான அறிகுறிகள் பட்டியல்**

♦ எப்போது பார்த்தாலும் சோர்வு, பலவீனம்.
♦ வீட்டில் சாதாரண வேலையைக் கூட செய்ய முடியாமல் சோர்வு.
♦ சரியான தூக்கம் வாரதிருப்பது
♦ எப்போதும் மன அழுத்தம்
♦ கவனக்குறைவு அதிகம்.
♦ ஜீரணம் ஆவதில் அடிக்கடி சிக்கல்
♦ மலச்சிக்கல் ஏற்படுவது
♦ அடிக்கடி எரிச்சல் படுவது
♦ தோல்பகுதி வறண்டு இருப்பது
♦ சொறி, சிரங்கு ஏற்படுவது
♦ வாய், உதடு வறண்டு போவது
♦ நகங்கள் திடமாக இல்லாமல், எளிதில் உடைவது
♦ தலைமுடி கொட்டுவது அதிகரிப்பு
♦ உடலில் தண்ணீர் வற்றியது போல உணவு
♦ எதையும் நினைவில் வைத்திருக்க முடியாத நிலை
♦ சாப்பாட்டை பற்றிய கவனம் இல்லாமை
♦ கண்டபடி கொழுப்பு உணவுகளை சாப்பிடுவது

இவ்வளவு அறிகுறிகளைக் கவனித்தாலே உடலுக்கு சத்தான உணவு சாப்பிடவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

சத்துக்கள் கிடைக்காத நிலையில் அடுத்து நோய்கள் அணிவகுக்கும் என்பதை உணரவேண்டும். இப்போதுள்ள இளைய தலைமுறையினருக்கு உணவு முறை மாறிவிட்டது. 'சாட், பிட்சா' போன்ற உணவுகளை தான் சாப்பிடுகின்றனர்.

இவைகளைத் தவிர்த்து காய்கறி, பழங்கள் கொண்ட உணவு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். அதுபோல உடன் தயாரித்த பானம் அருந்தலாம். போத்தலில் அடைக்கப்பட்ட பானங்களை கைவிடலாம். போத்தல் பானங்கள், நொறுக்குத் தீனிகள் குறைத்துக் கொண்டாலே, எதிர்காலத்தில் சர்க்கரை, இதயநோய் வராமல் தவிர்த்து விடலாம்.



# நயினாதீவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

2008ஆம் ஆண்டு (சர்வதாரி வருடம்)

## உயர் திருவிழா

| | | | | |
|---|---|---|---|---|
| 04.06.2008 | புதன் | பகல் | 11.30 மணி | கொடியேற்றம் |
| 08.06.2008 | ஞாயிறு | இரவு | 5ஆம் திருவிழா | முத்துச்சப்பறம் |
| 10.06.2008 | செவ்வாய் | இரவு | 7ஆம் திருவிழா | கைலைக்காட்சி |
| 12.06.2008 | வியாழன் | பகல் | 9 ஆம்திருவிழா | எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் |
| 13.06.2008 | வெள்ளி | பகல் | 10ஆம் திருவிழா | சிவபூசைகைலைக்காட்சி |
| | | இரவு | | திருமஞ்சம் |
| 14.06.2008 | சனி | பகல் | 11ஆ ம் திருவிழா | விசேடகரு, சர்ப்பபூசை, வாயு பட்சனி நாகம் வீதியுலா . |
| 16.06.2008 | திங்கள் | பகல் | 13ஆ ம் திருவிழா | கைலைக்காட்சி |
| | | இரவு | | சப்பறம் |
| 17.06.2008 | செவ்வாய் | பகல் | 14ஆம் திருவிழா | 09.30மணிக்கு தேர்த்திருவிழா |
| 18.06.2008 | புதன் | காலை | 15ஆம் திருவிழா | தீர்த்தம் |
| | | இரவு | | திருவூஞ்சல், கொடியிறக்கம் |
| 19.06.2008 | வியாழன் | இரவு | | தெப்போற்சவம் |

குறிப்பு;- நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் பெயரால் ஏமாற்றுப் பேர்வழிகள் எவரிடமும் எப்பொருளையும் வழங்க வேண்டாம் என அம்பிகை அடியார்களைக் கேட்டுக்கொள்கின்றோம். அமுதசுரபி அன்னதான சபையினர் வழமைபோல் உற்சவ காலத்தில் சிறப்பாக இவ்வாண்டும் அன்னதானப் பணியினைச் செய்ய ஒழுங்குகள் மேற்கொள் வதாக அறிவித்துள்ளனர். அவர்களது தொண்டர்களை உறுதிப்படுத்தி வழமைபோல் அக் கைங்கரியத்திற்கு உதவுக.

**அன்னையின் அருள் பெற அடியார்கள் அனைவரும் வருக**

ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

அறங்காவலர் சபை.

(சி/1107)


# அமெரிக்காவில் சூறாவளி

## 18 பேர் பலி

அமெரிக்காவின் மிஸ்ஸோரி மற்றும் ஒக்லஹொமா ஆகிய மாநிலங்களை சனிக்கிழமை தாக்கிய சூறாவளி காரணமாக குறைந்தது. 18 பேர் பலியாகியுள்ளனர்.

தென் மேற்கு மிஸ்ஸோரியில் இச் சூறாவளியால் 10 பேர் பலியாகியுள்ளதாக அம்மாநில அவசர கால முகாமைத்துவ நிறுவனம் அறிவித்துள்ளது.



அப்பிரதேசத்தில் தொடர்பாடல் வசதிகளும் மின்சார விநியோகமும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் மின் கம்பிகள் பலவும் அறுந்து விழுந்துள்ளதாகவும் தெரிவித்த அவசரகால முகாமைத்துவ பேச்சாளர் கஸி ஸ்ரோனர் இறந்தவர்கள் தொகை மென் மேலும் அதிகரிக்கக்கூடிய அபாயமுள்ளதாக கூறினார்.

அத்துடன் அப்பகுதியிலுள்ள வீடுகளும் கட்டடங்கள் பலவும் சேதமடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மிஸஸோரிய மாநிலத்தின் தென்மேற்கு பகுதியிலமைத்துள்ள நியூடன் நகரிலேயே அதிகளவு இறப்புக்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒக்லஹொமாவில் இச்சூறாவளி காரணமாக பல வாணிப கட்டடங்கள், வீடுகள் என்பன சேதமடைந்துள்ளதுடன் வாகனங்கள் பலவும் புரட்டப்பட்டதாக கூறப்படுகிறது. மேலும் அம் மாநிலத்திலுள்ள அநேகமரங்கள் முறிந்து விழுந்துள்ளதாகவும் பல இடங்களில் மின்சார ஒழுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-5)

# நர்கீஸ் புயலால் மியான்மரில்...

## இறந்தவர் எண்ணிக்கை ஒரு இலட்சம் காணாமல் போனோர் இரண்டு இலட்சம்

### ஐ.நா. கணக்கீடு

(பாங்கொங்)

மியான்மர் நாட்டை கடந்த 2ஆம் திகதி இரவு நர்கீஸ் என்ற பயங்கர புயல் தாக்கியது. இதில் ஐராவதி டெல்டா பகுதி மிகவும் மோசமாக இருக்கிறது. இந்த பகுதியில் ஐக்கிய நாடுகளை சபையின் சமூக அமைப்பு ஆய்வு நடத்தியது. இந்த ஆய்வின் படி இறந்தவர்களின் எண்ணிக்கை 63, 290இலிருந்து 1,01,682 வரை இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை மட்டும் 220000 வரை இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டு இருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் சமூக சேவை அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கத்திய நாடுகளின் சமூக சேவகர்களை மியான்மரின் இராணுவ ஆட்சி சேதம் அடைந்த பகுதிகளுக்கு சென்று உதவிகள் செய்ய அனுமதி மறுக்கிறது. ஏராளமானவர்கள் பாங்கொக்கில் காத்திருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. (அ-5)

# உலக தரிசனம்

# பாகிஸ்தானின் ஆண்கள் கல்லூரி போராளிகளால் வெடிவைத்து தகர்ப்பு

(பாகிஸ்தான்)

பாகிஸ்தானிலுள்ள, ஆண்களுக்கான அரச பட்டப்படிப்பு கல்லூரியொன்று கடந்த சனிக்கிழமை போராளிகளால் வெடிவைத்து தகர்க்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின்போது டார்ரா நகரிலுள்ள மேற்படி பாடசாலைகளின் வெவ்வேறு பகுதிகளில் வெடிபொருட்கள் பொருத்தப்பட்டிருந்து வெடிக்க வைக்கப்பட்டுள்ளதாகவும்,

எனினும் இது தொடர்பில் கல்லூரியின் காவலாளிகள் அறியாமலிருந்துள்ளார்கள் எனவும் உள்ளூர் வாசியொருவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் இரசாயனகூடங்கள். அதிபரின் அறை, வகுப்பறைகள், தளபாடங்கள், உபகரணங்கள் உட்பட முழுக்கட்டடமும் தரை மட்டமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



பெண்கள் பாடசாலை ஆசிரியர்களாக கடமையாற்ற போராளிகளால் தடை விதிக்கப்பட்டதையடுத்து அகுர்வால் மற்றும் ஷிராகி ஆகிய பிரதேசங்களிலுள்ளபெண்கள்பாடசாலைகள்மூடப்பட்டுள்ளன. இச் சம்பவத்தையடுத்து அப் பிரதேசத்தில் இரவு நேர ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# அமெரிக்க அதிபரின் மகளின் திருமணத்தில் 350க்கும் குறைவானவர்களே பங்கேற்பு

(கிராபோர்ட்)

அமெரிக்க அதிபர் புஷ்ஷின் மகள்



ஜென்னாவின் திருமணம் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள புஷ்ஷின் பண்ணை வீட்டில் நேற்று முன்தினம் நடந்தது.

அமெரிக்க முன்னாள் அதிபரும் தற்போதைய அதிபரின் தந்தையுமான ஜோர்ஷ் புஷ் அவரது மனைவி பர்பரா உள்ளிட்டோர் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது. கச்சா எண்ணெய் விலை உயர்வு பயங்கரவாதம் தொடர்பான கவலைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு அதிபர் புஷ் திருமண நிகழ்ச்சியில் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்.

இதுபற்றி அவர் கூறுகையில் இன்று எனக்கு மிகவும் சந்தோஷமான நாள் எனக்கு மட்டுமல்ல எனது குடும்பத்திற்கும் இதுவே மகிழ்ச்சியான நேரம். ஜென்னாவுடன் சேர்ந்து நானும் எனது மனைவியும் இந்த நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறோம். சர்வதேச அன்னையர் தினம் கொண்டாடப்படும் வேளையில் திருமணம் நடந்துள்ளதால் எனது மனைவி லாரா மிகவும் மகிழ்ச்சியுடன் உள்ளார் இந்த திருமணம் மற்றும் அதைத் தொடர்ந்த விருந்தில் 350க்கும் குறைவானவர்களே கலந்து கொண்டனர். (அ-5)

> தைரியம், சுறுசுறுப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை இந்த நான்கும் ஒரு மனிதனை சீக்கிரம் முன்னுக்குக் கொண்டுவரும் கருவிகள்.
> —சுவாமி இராமதாசர்

வலம்புரி

## டாக்டர் நவமலர் கனகரத்தினத்தின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி (செல்வி) நவமலர் கனகரத்தினம் அவர்கள், காலமாகிவிட்டார் என்ற செய்தி வேதனைக்குரியது.

அவரின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

யாழ்.குடாநாடு யுத்த சூழ்நிலைக்குள் அல்லல்பட்டு பெரும் இடர்பட்ட வேளையில் வைத்திய கலாநிதி நவமலர் கனகரத்தினம் அவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக கடமையாற்றினார்.

1995இல் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட மிகப்பெரும் இடப்பெயர்வின்போது யாழ்.போதனா வைத்தியசாலையின் நிலை என்ன? என்ற கேள்விக்கு மத்தியில் போதனா வைத்தியசாலையின் பணி தொடர்ந்தும் மக்களுக்குக் கிடைக்கும் வகையில் தீர்மானத்தை எடுத்து அதனை அமுல்படுத்தினார்.

அவரின் ஆளுமை மிக்க செயற்றிறனால் அப்போது அல்லல்பட்டு ஆற்றலைந்த மக்கள் ஆறுதல் அடைந்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் பணி மந்திகை வைத்தியசாலையில் தொடங்கியது.

மந்திகை வைத்தியசாலையின் இடம் போதாதென்ற நிலையில் அருகில் உள்ள பாடசாலைக் கட்டடத்தில் நோயாளர்களை அனுமதிக்கும் விடுதிகளை ஆரம்பித்தார்.

யுத்தம் ஒருபுறம் –இடப்பெயர்வு மறுபுறம் என்ற ஊழிக்கால பிரளயத்தை யாழ்ப்பாண மக்கள் சந்தித்த 95ஆம் ஆண்டில்; போக்குவரத்துத் தடை, மருந்துத் தட்டுப்பாடு, வைத்தியர்களின் பற்றாக்குறை என்ற பல்வேறு இடர்பாடுகள் மத்தியில் வைத்திய கலாநிதி நவமலர் கனகரத்தினம் அவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையை இயக்குவதில் ஆற்றிய பணி காலத்தால் என்றும் மறக்கப்படக்கூடியதல்ல. அது என்றோ ஒருநாள் வரலாற்றின் பதிவாகும்.

அதேநேரம் அம்மையார் காலம் உணர்ந்து ஆற்றிய பணியை யாழ்ப்பாண மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.

யாழ்ப்பாண மண்ணில் இருந்து டாக்டர்கள் வெளியேறி வெளிநாடுகளிலும் நாட்டின் தலைநகரிலும் தங்கிய காலத்தில் வைத்திய கலாநிதி நவமலர் கனகரத்தினம் அவர்கள் இந்த மண்ணில் தங்கியிருந்து யாழ்.போதனா வைத்தியசாலையை இயக்கினார்.

இடப்பெயர்வு, குண்டுவீச்சுக்களின்போதெல்லாம் வைத்தியசாலையை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தி அதனை செயலிழக்காமல் பாதுகாத்தார்.

அவர் அன்று ஆற்றிய தூய பணியின் காரணமாகவே இன்று யாழ்ப்பாண மண்ணில் போதனா வைத்தியசாலை தனது சேவையை குறையாது ஆற்றுகின்றது.

மக்களோடு இருந்து துன்பப்பட்டபோதெல்லாம் இறைபணிக்கு ஒப்பான மருத்துவப் பணியை ஆற்றிய அம்மையாரின் தூய ஆத்மா எல்லாம் வல்ல வைத்தியநாதப் பெருமானின் திருவடிகளில் நித்திய பேரின்பம் அடையப் பிரார்த்திப்போம்.

# அரசின் செயற்பாடுகளுக்கு கிழக்கு மக்கள் அளித்த அங்கீகாரம்

## தேர்தல் வெற்றி குறித்து ஜனாதிபதி

கிழக்கு மாகாணத்தில் ஜனநாயகத்தையும் இயல்பு நிலையையும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டு



வரும் முயற்சிகளை அப் பிரதேச மக்கள் அங்கீகரித்திருப்பதை கிழக்கு மாகாண சபைத்தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியிருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் ஐ.ம.சு முன்னணிக்கு கிடைத்துள்ள மகத்தான வெற்றி குறித்து ஜனாதிபதி விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் ஜனாதிபதி மேலும் தெரிவித்திருப்பதாவது,

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கிழக்கு மாகாணத்தை விடுவித்து அங்கு அரசாங்கம் மேற்கொண்டு வரும் அபிவிருத்தி பணிகளை கிழக்கு மாகாண மக்கள் அங்கீகரித்துள்ளன.

பயங்கரவாதத்தை தோற்கடித்து சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும் ஜனநாயக விழுமியங்களை பலப்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் கிழக்கு பிரதேச மக்கள் அரசாங்கத்திற்கு தெளிவான அங்கீகாரத்தை வழங்கியுள்ளன.

அனைத்து மக்களும் சுதந்திரமாகவும் அமைதியாகவும் வாழ்வதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் கொள்கையே இந்தத்தேர்தல் வெற்றி தெளிவாக அடையாளப்படுத்தியுள்ளது. இந்தத் தேர்தலில் கிழக்கு மக்கள் அமைதியான முறையில் வாக்களித்ததோடு இரண்டு தசாப்தங்களாக மறுக்கப்பட்டுவந்த அவர்களது ஜனநாய உரிமையை பாதுகாப்பதற்கான கரிசனையையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்தத் தேர்தலில் போட்டியிட்ட சகல அரசியல் கட்சிகளுக்கும் அவற்றின் வேட்பாளர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு தேர்தல்கள் ஆணையாளர், அரச அதிகாரிகள் பொலிஸார் மற்றும் முப்படையினர் ஆகியோருக்கும் இத்தருணத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் விதமாக செயற்படுவார்கள் என நம்புவதோடு ஜனநாயக செயற்பாடுகளை பரவலாக்குவதற்கும் நாட்டைப் பலப்படுத்துவதற்கும் இவர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன் என்றும் அந்த அறிக்கையில் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# தமிழர் ஒருவரே முதலமைச்சராக வரவேண்டும் என்பதே கிழக்கு மாகாண மக்களின் எதிர்பார்ப்பு

## ஆசாத் மௌலானா தெரிவிப்பு

(கொழும்பு)

நீண்டகாலமாக பாதிக்கப்பட்டிருக்கும் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் தமிழர் ஒருவர் முதலமைச்சராக வரவேண்டும் என்பதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு தமது வாக்குகளை அளித்திருப்பதாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் பேச்சாளர் ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு அளிக்கப்பட்ட வாக்குகளில் 75 ஆயிரம் வாக்குகள் தமிழ் மக்களால் அளிக்கப்பட்டிருப்பதால் பிள்ளையானே முதலமைச்சராக நியமிக்கப்படவேண்டுமென கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் கூறினார்.

தமிழர் ஒருவரே முதலமைச்சராக வரவேண்டுமென எதிர்பார்த்து தமிழ் மக்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளனர். இதன் காரணமாகவே பிள்ளையான் மட்டக்களப் பில் கூடுதல் வாக்குகளைப் பெற்றுள்ளார். என ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல்குழு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கூடி ஆராய்ந்துள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலமைச்சர் யார் என்பது விரைவில் அறிவிக்கப்படுமென தாம் எதிர்பார்ப்பதாகவும் தமிழ் மக்களுக்கு சார்பாகவே நியமனம் அமையும் எனவும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஹிஸ்புல்லா முதலமைச்சராக வந்தாலும் இனப்பாகுபாடின்றி இணைந்து வேலை செய்வதற்குத் தயாராக இருப்பதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைமை வேட்பாளர் பிள்ளையான் பி.பி.சி. செய்திச் சேவைக்குக் கூறியிருந்தார்.

இதேவேளை, ஐக்கிய சுதந்திரக் கூட்ட மைப்பின் கிழக்கு மாகாணசபைத் தலைவர் யார் என்பது பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே இறுதித் தீர்மானம் எடுப்பார் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிள்ளையான் மற்றும் ஹிஸ்புல்லா ஆகியோர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டுள்ளனர். இவர்களில் யார் கூடுதலான பிரதிநிதிகளைப் பெற்றிருக்கிறாரோ அவரே முதலமைச்சராக நியமிக்கப்படுவார். இதுவே ஆரம்பத்தில் இணங்கிக் கொள்ளப்பட்ட விடயம் என ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த கூறியுள்ளார்.

தேர்தலில் பங்குபற்றிய அனைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தின் தீர்மானத்துக்கு மதிப்பளிக்கவேண்டும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-5)

# ஆசிரியர், அதிபர்களுக்கான சம்பள முரண்பாட்டுக்கு இரு வாரங்களுக்குள் தீர்வு; கல்வியமைச்சர் உறுதி

(கொழும்பு)

ஆசிரியர், அதிபர்களுக்கான சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளது. இரண்டு வாரங்களுக்குள் இச்சம்பள முரண்பாட்டிற்கு தீர்வு காணப்படும். அத்தோடு அதிபர் ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைக் கொடுப்பனவுகளும் வழங்குவதற்கும் பாராளுமன்ற அங்கிகாரம் கிடைத்துள்ளது. திறைசேரியில் இதற்கான நிதி கிடைக்கும் பட்சத்தில் இந்நிலுவைக்கொடுப்பனவுகள் அனைத்தும் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக் கிழமை கல்வி அமைச்சுகாரியாலயத்தில் ஆசிரியர்விடுதலை முண்ணணி தூது குழுவிற்கும் கல்வி அமைச்சருக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அவர் இவ்வாறு தெரிவித்ததாக ஆசிரியர் விடுதலை முன்னணி தூதுக்குழு தலைவரும்மத்தியமாகாணதமிழ்கல்விஅமைச்சருமான எஸ்.அருள்சாமி ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது அமைச்சர் அருள்சாமியின் தூது குழுவினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இணக்கம். தெரிவித்ததாகவும் அருள்சாமி மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் அருள்சாமி தொடர்ந்தும் தெரிவித்ததாவது,

ஆசிரியர் ஆலோசகர்களை சேவையில் இணைத்துக்கொள்ளவும் தரம் ஒன்று அதிபர்களுக்கு தீர்வையற்ற வாகனம் இறக்குமதி செய்யவும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன் சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவச பாடபுத்தகங்கள் வழங்கப்படும் ஆசிரியர்கள் உரிய முறையில் விடுமுறை பெறும் பட்சத்தில் தேர்தல்களில் போட்டியிடமுடியும்.

சகல கல்வித் திணைக்களங்களினதும் தமிழ்மொழி அமுலாக்கம் உறுதிசெய்யப்படும் பெருந்தோட்ட ஆசிரியர்களுக்கு முறையான ஆசிரியர் பயிற்சிகள் வழங்கப்படும் நாட்டிலுள்ள அனைத்து ஆசிரியர் வள நிலையங்களுக்கும் தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மேலும் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்ட அதிபர் ஆசிரியர்களுக்கான நஷ்ட ஈடு வழங்கப்படவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. (அ-5)

ஓலைச் சுவடிகள் 28

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### பொரித்த எண்ணெயால் விளக்கு பற்ற வைக்கலாமா?

பொரித்த எண்ணெயை விளக்கில் ஊற்றக்கூடாது என்பது முன்னோர்கள் வகுத்த விதி. அதே போல் விளக்கு பற்றவைக்கும் எண்ணெயைச் சமையலுக்கும் பயன்படுத்தக் கூடாது என்பது விதி. நவீன சாஸ்திரத்தின் படி ஒரு முறை பொரித்த எண்ணெயால் மறுபடி சமையல் செய்வதும் தவறு. இதற்கு காரணமுண்டு.

முன்பு நம்பிக்கையாகவே இது கடைப்பிடிக்கப்பட்டிருந்தது . ஆனால் இப்போது அதனாலுண்டாகும் தீங்குகளை பற்றி நவீன சாஸ்திரம் கூறுகின்றது. பல சோதனைகள் செய்தே இதை நிரூபித்துள்ளனர். அப்பளம் முதலியவை பொரித்த பின் அந்த எண்ணெயை பத்திரப்படுத்தி வைத்து மறுபடியும் பயன்படுத்தும் வழக்கம் இன்றும் உண்டு. இது தீமை விளைவிக்கும் என்பது நிபுணர்கள் கருத்து பொரிப்பதற்காக எண்ணெயை ஒரு முறை உபயோகித்தால் அது சூடாகும் போதே அதில் காபன் உருவாகும் .அவ்வாறு காபன் உருவான எண்ணெயில் வேறு எண்ணெய் சேர்த்தாலும் அதே எண்ணெயை பயன்படுத்தினாலும் தயாராகும் உணவுப்பொருளில் தீங்கு விளைவிக்கும் கூட்டுப்பொருள்கள் உருவாகும் என்று கண்டறிந்துள்ளனர். இந்த உண்மையை அன்றே புரிந்து கொண்டு இப்படி ஒரு வழக்கம் ஏற்படுத்தியிருந்தனர் எனக்கூறலாம்.

# இராணுவத் தளபதி வவுனியா விஜயம்

(வவுனியா)

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா வவுனியா பிரதேசத்துக்கு சென்று பாதுகாப்பு நிலைவரங்கள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுவிட்டு நாடு திரும்பிய லெப். ஜெனரல் சரத் பொன்சேகா கடந்த சனிக்கிழமை காலை பாதுகாப்பு நிலைவரங்களை ஆராயும் பொருட்டு வவுனியாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

வவுனியா சென்ற இராணுவத் தளபதியை அப்பிராந்தியத்துக்குப் பொறுப்பான கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் ஜகத் ஜெயசூரிய வரவேற்று அழைத்துச் சென்றதுடன் வன்னிப் பிராந்தியத்துக்கான இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போது ஒவ்வொரு பிரிவுக்கும் பொறுப்பான கட்டளைத் தளபதிகள் தங்களுக்குப் பொறுப்பான பிரதேசங்களின் கள மற்றும் பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து இராணுவத் தளபதிக்கு விளக்கமளித்துள்ளனர். இராணுவத் தளபதி இதன் போது தேவையான மேலதிக அறிவுறுத்தல்களை வழங்கியதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (ச-5)

## நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலத்தில் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் இவ் வருடம் வெளியிடப்படவுள்ள 16-வது நல்லைக்குமரன் மலருக்கு உகந்த தரமான ஆக்கங்கள் மற்றும் கவிதைகள் கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி உதவுமாறு துறைசார்ந்த அறிஞர்கள், சைவப் பெரியார்கள் மற்றும் கல்விமான்களை சைவ சமய விவகாரக்குழு கோரியுள்ளது. (ச)

## வீரவன்சவை...

கப்பட்டுள்ளது. தேசிய சுதந்திர முன்னணி என கட்சிக்கு பெயரிடப்பட்டுள்ளது. கட்சியின் தலைவராக விமல் வீரவனசவும் பொதுச் செயலாளராக நந்தன குணதிலகவும் தேசிய அமைப்பாளராக கமல் தேசப்பிரியவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கட்சியின் நிறம் பொன்னிறம். இலச்சினை கிரீடமும் அதன் இரு புறமும் நெற்கதிர்களும் கிரீடத்திற்கு நடுவே ஐந்து நட்சத்திரங்களுமாகும்.

இம்முன்னணியை புதிய அரசியல் கட்சியாக பதிவு செய்வதற்கான விண்ணப்பம் தேர்தல்கள் ஆணையாளரிடம் நேற்று முன்னணியின் பொதுச் செயலாளர் நந்தன குணதிலகவினால் கையளிக்கப்பட்டுள்ளது.

## சுமுகமாக நடந்...

ததாகவும் அங்கு வாக்காளர்களுக்கு எதிரான வன்முறைகள் எதனையும் தாம் காணவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் வன்முறைகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்ட இடங்களுக்கு நாம் திடீரென சென்று கண்காணித்தோம் ஆனால் அங்கு எவ்வித தேர்தல் வன்முறைகளையும் காணவில்லை. எதிர்க்கட்சி வேட்பாளர்கள் கூட வன்முறைகள் எவையும் இடம்பெறவில்லை எனக் கூறினர் என்றனர். (ச)

## அம்பாறை...

கப்பட்டிருந்ததாகவும் தமது கடமை முடிந்து பொலநறுவை திரும்பிக் கொண்டிருந்தபோது இச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ச)

## கிழக்கின் முதலமைச்...

அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளதால் தனக்கே முதலமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டுமென அவர் கூறினார். தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக இருந்தால் மட்டுமே கிழக்கை அபிவிருத்தி செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடன் பேசி இது குறித்த பிரச்சினைக்கு இன்று மாலை தீர்வு காண முடியும் எனவும் விருப்பு வாக்குகளின் அடிப்படையில், விகிதாசார அடிப்படையில் தானே அதிகம் பெற்றுள்ளதாகவும் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார். (ச)

## ...த தமிழ் அரசியல்...

தெரிவிக்கப்படுகிறது.

உடைமைகள் அனைத்தையும் விட்டுவிட்டு தனியாகவே கைதிகள் பூசா தடுப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகள் பூசா தடுப்பு முகாமுக்கு திடீரென மாற்றப்பட்டமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான என்.சிறிகாந்தா; நீதியமைச்சர் டிலான் பெரேரா, பிரதி நீதியமைச்சர் வீ.புத்திரசிகாமணி ஆகியோருடன் நேற்று தொடர்பு கொண்டு நிலைமையினை விளக்கிக் கூறியுள்ளார்.

இதனையடுத்து பிரதியமைச்சர் புத்திரசிகாமணி சிறைச்சாலை ஆணையாளருடன் தொடர்பு கொண்டு தமிழ் அரசியல் கைதிகள் பூசா முகாமுக்கு திடீரென மாற்றப்பட்டமை குறித்து விசனம் தெரிவித்ததுடன் அவர்களை மீளவும் புதிய மகசீன் சிறைச்சாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

புதிய மகசீன் சிறைச்சாலை சூழலில் கடந்த 10 ஆம் திகதி குண்டு வெடிக்கும் சூழல் காணப்பட்டதாகவும் இதனாலேயே தமிழ் அரசியல் கைதிகளை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் சிறைச்சாலை ஆணையாளர் வஜிர விஜய குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக நீதி அமைச்சர் டிலான் பெரேரா நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிறிகாந்தாவிடம் உறுதியளித்துள் ளார். (ச-5)




## கிழக்கு...

கடந்த 10 ஆம் திகதி நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தல், வன்முறைகள் நிறைந்த தேர்தல் என கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ் ஹக்கீம் ஆகியோர் தெரிவித்தனர்.

அதிகப்படியான தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இம்முறை கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இடம்பெற்றுள்ளன. இவற்றுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்கவிருப்பதுடன் சர்வதேச ரீதியிலும் பிரசாரங்களை முன்னெடுக்கவிருப்பதாக ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

வெற்றிகரமாக தேர்தல் முடிபடைந்திருப்பதாகத் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்திருந்தார். ஆம்! தேர்தல் முடிபடைந்துள்ளது. கிழக்கு மாகாண மக்களின் வாக்களிக்கும் உரிமை இந்தத் தேர்தலுடன் முடிபடைந்துள்ளது என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

பிள்ளையான் குழுவினரின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் எனவும் தேர்தல்கள் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடத்தப்பட வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணையாளரிடம் தாம் கோரிக்கை விடுத்திருந்தபோதும் தேர்தல்கள் வன்முறைகள் நிறைந்ததாகவே முடிபடைந்துள்ளது.

பிள்ளையான் குழுவினருடன் அமைச்சர்கள் இணைந்து கள்ள வாக்குகளையிட்டு வாக்குப் பெட்டிகளை நிரப்பியிருந்தனர் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

மோசமான தேர்தல்

தனது வாழ்க்கையில் இவ்வாறு வன்முறைகள் நிறைந்த மோசமான தேர்தல் ஒன்றைக் காணவில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ் ஹக்கீம், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கூறினார்.

திருகோணமலையில் பிள்ளையான் குழுவினர் பெருமளவில் இல்லை என்பதாலேயே அங்கு எம்மால் வெல்லக் கூடியதாக இருந்தது. எனினும் முஸ்லிம் அமைச்சர்கள் வாக்காளர்களைத் தாக்கி வன்முறைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பிள்ளையான் குழுவினர் வாக்குப் பெட்டிகளை நிரப்பியுள்ளனர். இந்த வன் முறைகள் நிறைந்த் தேர்தலுக்கு எதிராக உள்ளூரில் போராட்டங்களை நடத்தவிருப்பதுடன் சர்வதேசரீதியிலும் பிரசாரங்களை முன்னெடுக்க இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## மரண அறிவித்தல்

### வைத்திய கலாநிதி
### செல்வி நவமலர் கனகரத்தினம்



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யாழ். போதனா வைத்தியசாலை முன்னாள் பணிப்பாளரும், இன்னாள் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரியுமான வைத்திய கலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினம் ஞாயிற்றுக்கிழமை (11.05.2008) அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் கருங்காலி, காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் கந்தையா கனகரத்தினம் சுதுமலை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகரத்தினம் தங்கம்மா ஆகியோரின் அன்பு மகளும், திருமதி ம.செல்வமலரின் அருமைச் சகோதரியும், ஓய்வு பெற்ற கணக்காய்வாளர் திரு. சி.மகாதேவனின் மைத்துனியும், குகராஜன் (கனடா), யோகராசா (கனடா), மகாலட்சுமி (அவுஸ்திரேலியா), புஸ்பராணி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும்,

சாந்தி, தில்லைராணி, செல்வராஜா, ஸ்ரீமுத்துக்குமரன் ஆகியோரின் மாமியாரும் ஆரணி, பிரவீன், செந்தூரா, மதுரா, ஜெயேந்திரா, கோகுல், ராகுல், விதுரன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் கணேசமூர்த்தி வத்சலனின் (பிரதேச செயலகம், நல்லூர்) அன்பான வழிகாட்டுத் தாயாரும், வைஷ்ணவன், விஷ்ணுகனின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

திருமதி. ம.செல்வமலர்
மெலிஞ்சோடை,
காரைநகர்.

க.வத்சலன்
சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.

(1179)

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

## அறிவித்தல்

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 102 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட மனு தொடர்பானது**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் நிர்வாக செயற்பாடுகள் தொடர்பாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக என்னால் பெறப்பட்ட ஆவணங்களைப் பரிசீலித்த பின்பு, இது பற்றி விசாரணை நடாத்தும் பொருட்டு நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 102 (4) ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழு ஒன்றை நியமித்து விசாரணையை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் பின்வருவோர் கடமையாற்றுவர் என இத்தால் அறியத் தருகின்றேன்.

01. ஆறுமுகசுவாமி சிவசுவாமி – மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம் – தலைவர்
02. பொன்னுத்துரை பாலசுந்தரம்பிள்ளை – வாழ்நாள் பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம் – உறுப்பினர்
03. முத்துலிங்கம் நந்தகோபாலன் – பிரதேச செயலர், வேலணை – உறுப்பினர்.

தங்கள் சேவையிலுள்ள

அரசாங்க அதிபர் /மாவட்ட செயலகம்,
யாழ்.மாவட்டம்.

(C-1110)



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

## உற்சவகால தற்காலிக கடைகள் ஏலம் கூறுதல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் 2008 ஆம் ஆண்டுக்கான மகோற்சவம் 04. 06.2008-19.06.2008 வரை 16 நாட்கள் நடைபெறவுள்ளன.

இக்காலப்பகுதியில் தற்காலிக கடைகள் அமைத்து வியாபாரம் செய்ய விரும்புவோர் இவ் ஏலத்தில் பங்கு கொள்ளமுடியும். 18.05.2008 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆலய தெற்கு வீதியில் கடைகளுக்கான நிலத்துண்டுகள் ஏலம் கூறப்படும்.

ஏலத்தொகையின் 1/4 பங்கினை உடன்செலுத்தி பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். கோயிலின் விதிமுறைகளுக்கும் சுகாதாரப் பிரிவினரின் கட்டுப்பாடுகளுக்கும் அமைந்து நடக்க வேண்டும்.

கு.சரவணபவானந்தன் ஜே.பி,
கௌரவ செயலாளர்

(C-1108)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.